# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2014

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு

உள்ளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| **01. அறிமுகம்** | **02 -03** |
| **02. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அதன் கீழ் செயற்படும் நிறுவனங்கள்** | **04 - 07** |
| **03. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்** | **08 - 35** |
| 03.1. தேசிய மொழிகள் பிரிவு | 08-22 |
| 03.2. சமூக ஒருமைப்பாடு மற்றும் இனவிவகார அலுவல்கள் பிரிவு | 23-32 |
| 03.3. நிர்வாகப் பிரிவு | 33 |
| 03.4. திட்டமிடல் பிரிவு | 34 |
| 03.5. கணக்குப் பிரிவு | 35 |
| 03.6. உள்ளக கணக்காய்வு பிரிவு | 35 |
| **04. அரச கரும மொழிகள் திணைக்களம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்** | **36 - 44** |
| **05. அரச கரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்** | **45 - 60** |
| **06. மொழிக் கற்கைகள் மற்றும் கல்விக்கான தேசிய நிறுவனம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்** | **61- 76** |
| **07. தேசிய மொழிகள் திட்டம்** | **77 - 80** |
| **08. சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னெடுப்புகள்** | **81 - 82** |
| **09. சட்ட அமுலாக்கல் நீதிக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்** | **83 - 85** |
| **10. நாணய ஒதுக்கீடு** | **86 -98** |
| **11. முன்பணக் கணக்கு** | **99 -100** |
| **12. முடிவுரை** | **101-102** |

# 01.அறிமுகம்

## 01.அறிமுகம்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சானது 1681/03 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை ஊடாக 2010.11.22ம் திகதி ஏற்படுத்தப்பட்டதாகும். அமைச்சின் பணிகளை முன்னெடுப்பதற்கு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார அவர்களுக்கு தத்துவம் வழங்கப்பட்டதுடன் திருமதி எம். எஸ்.விக்கிரமசிங்க அமைச்சின் செயலாளராக செயலாற்றுகிறார். இவ்வமைச்சு இல 40, புத்தகமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**தொலைநோக்கு**

வேற்றுமையில் ஒற்றுமையுடன் பலம் பெற்ற இரு மொழிகளுடன் இதயபூர்வமாக இணைந்து எல்லாவித இனங்களினதும் கலாசார தனித்துவங்களை பாதுகாக்கும் சமத்துவமிக்க இலங்கை தேசம்.

**பணிநோக்கு**

எல்லோருடைய உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற, ஒருவரையொருவர் மதிக்கின்ற சமூக ஒருங்கிணைப்புடனான முன்னேற்றகரமான மும்மொழி சமூகமொன்றை உருவாக்குவதற்கு தேவையான கொள்கை உருவாக்கம், வழிகாட்டல் மற்றும் வசதிகளை வழங்குதல்

### தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்

- தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாடு தொடர்பான கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட செயற்பாட்டு எல்லைகுள்ளும் வரவு செலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும்.
- தேசிய மொழிக் கொள்கையை வகுத்தமைத்தல், செயற்படுத்துதலுடன் தொடர்பான அலுவல்கள்.
- சமூக ஒருமைப்பாடும் இனங்களுடனான அலுவல்களும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகள் மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுல்படுத்தும் முதன்மை முகவர்களில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் ஒன்றாகும்.

# 02. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

தேசிய மொழிகள்
மற்றும் சமூக
ஒருமைப்பாட்டு அமைச்சு

தொ.பே-011-2883926-28
மின்னஞ்சல்-
admin@lanintegmin.gov.lk
தொலைநகல்- 011-2883929
இணையதளம்-
W.W.W.lanintegmin.gov.lk

சப்ரகமுவ மாகாண
மத்திய நிலையம்
சரத் புத்தெட்டுவகம
வலவ்வ,
குருவிட்ட, இரத்தினபுரி

தொ.பே- 0452262777
மின்னஞ்சல்-045 2264552

வட மாகாண மத்திய
நிலையம்
புதிய மாவட்ட
செயலாளர் கட்டிடத்
தொகுதி
திருநகர், கிளிநொச்சி

தொ.பே-021 2283660
மின்னஞ்சல்-021 2283656

தேசிய
மொழிப்பிரிவு

தொ.பே-
0112883713

மின்னஞ்சல்-
addlsecnl@lanintegmin.gov.lk

சமூக
ஒருமைப்பாடு
மற்றும்
இனவிவகார
அலுவல்கள்
பிரிவு

தொ.பே
011 2865942
மின்னஞ்சல்-
Hazeem.mnlsi@gmail.com
தொலைநகல்-
011 2883785

நிர்வாகப் பிரிவு

தொ.பே-011
2883782
மின்னஞ்சல்-

sasad@lanintegmin.gov.lk
தொலைநகல்-
011 2883784

திட்டமிடல்
பிரிவு
தொ.பே-011
2886796
மின்னஞ்சல்-
planningdv@hotmail.com
planningmnlsi@yahoo.com
தொலைநகல்-
011 2886797

கணக்குப்
பிரிவு

தொ.பே 011
2883938
மின்னஞ்சல்-
imprestnlsi@gmail.com
தொலைநகல்-
011 2888928

உள்ளக
கணக்காய்வு
பிரிவு

தொ.பே
011 2501949

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

### அரச கரும மொழிகள் திணைக்களம்

தொ.பே 011 2888934

மின்னஞ்சல் - comol@sltnet.lk

தொலைநகல்- 0112888928

### அரச கரும மொழிகள் ஆணைக்குழு

தொ.பே 011 2871378

மின்னஞ்சல்- olc@sltnet.lk

தொலைநகல்- 011 2871379

### மொழிக் கற்கைகள் மற்றும் கல்விக்கான தேசிய நிறுவனம்

தொ.பே 011 3092909

மின்னஞ்சல்- nilet@sltnet.lk

தொலைநகல்- 011 2665229

**அமைச்சின் கீழ் உள்ள**
**வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள்**



# 03. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

## 03.1. மொழிகள் பிரிவு

**அறிமுகம்**

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்ட அமைச்சு 2010.11.22ம் திகதியிடப்பட்ட மற்றும் 1681/30 இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தினூடாக அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்காக கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பு மற்றும் உபாயங்களை தயாரித்தல் என்ற அடிப்படை நேக்கங்களைக் கொண்டு தாபிக்கப்பட்டதாகும். இலங்கை அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கலும் அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கல் செயற்பாடுகளை மேற்பார்வை மற்றும் தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் நிலையை ஏற்படுத்துவதற்கு சாதகமான அடியை முன்வைத்து அமைச்சு 2010ம் ஆண்டு மொழிகள் பிரிவு தாபிக்கப்பட்டது.

மொழிப்பிரிவு மூலம் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகளை திட்டமிடும் போது அடிப்படையாக கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் கீழ்வருபவை முக்கியமானவையாகும்

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்.
- மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அமைவான தேசிய கொள்கைக்கு அமைவாக அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்.
- மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டு திட்டத்திற்கு அமைவாக அமைச்சின் விடயப் பரப்புக்கு அமைவாக சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்.
- அரச உத்தியோகத்தர்கள் மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு அமைவாக முன்வைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழு அறிக்கை சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்.

**2014 ஆம் ஆண்டில் மொழிப் பிரிவானது 4 இலக்குகளை மையமாகக் கொண்டு அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.அவையாவன,**

1.தேசிய மொழிகள் அபிவிருத்தித்திட்டம்

2.மும்மொழி இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

3.இரு மொழி மக்கள் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

4.தேசிய மொழிகள் திட்டத்துடன் இணைந்து செயற்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**தேசிய மொழிகள் பிரிவுக்கான பொருளாதார முன்னேற்றம்**



| தொ /இல | செயற்பாடு | உத்தேசிக்கப்பட்ட தொகை | உண்மைச் செலவு | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | தேசிய மொழிகள் அபிவிருத்தித்திட்டம் | 5,000,000.00 | 3,511,943.00 | 70.23% |
| 02 | மும்மொழி இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 20,000,000.00 | 13,764,361.00 | 68.82% |
| 03 | இருமொழி மக்கள் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 30,000,000.00 | 29,465,000.00 | 98.21% |
| | மொத்தம் | 55,000,000.00 | 46,741,304.00 | 84.98% |

## 1. தேசிய மொழிகள் அபிவிருத்தித்திட்டம்

### 1.1. அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ரீதியான செயலமர்வு



பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த சேவையை வழங்குவதை நோக்கமாக கொண்டு அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுளளது. அதற்கேற்ப இதுவரையும் மேல் மத்திய தென் மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி பொலிஸ் நிலையங்களில் பிரதான



உத்தியோகத்தர்களுக்காக இச் செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது.அதன் பிரதான ஆலோசகராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் திரு பிரதிபா மஹாநாம ஹேவா அவர்களை வளவாளராகக் கொண்டு இச் செயலமர்வு நடைபெற்றது.

அந்தந்த பகுதிகளில் பொலிஸ் சேவைகளுக்கு அமைவாக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் நடைமுறை முரண்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளிப்பதன் ஊடாக இச்செயலமர்வு இடம்பெற்றமை விசேடமாகும். அத்தோடு அந்த பிரதேசங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் முரண்பாடுகளை கண்டறிந்து அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அமைச்சு முன்வந்துள்ளது.

### 1.2. இரு மொழி பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் ஏனைய பிரதேச செயலாளர் காரியாலயங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மீளாய்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்

அரசகரும மொழிக் கொள்கை






நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் முரண்பாடுகளை களைந்து அதன் பணிகளை முன்னேற்றுவதனை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். அதற்கேற்ப இரு மொழி பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் ஏனைய பிரதேச செயலாளர் காரியாலயங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக விமர்சனங்கள் மதிப்பீடு 24 நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்கள் மற்றும் செயலாளர் அவர்களின் வழிகாட்டலின் பேரில் விமர்சனங்கள் மேற்கொள்வதற்காக மேற்பார்வை குழு தெரிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப 2014.08.21 ஆம் திகதி மதிப்பீட்டுக் குழு வத்தளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 11 அரச நிறுவனங்களிலும் மற்றும் 2014.09.19 ஆம்

திகதி நீர்கொழும்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரச நிறுவனங்கள் 11 இலும் மேற்பார்வை செய்யப்பட்டன.

மேலும் 2014.10.31 2014.11.10.17.21.24 ஆம் திகதிகளில் களுத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் அரச நிறுவனங்கள் 55 ல் மேற்பார்வை செய்யப்பட்டது. அதன் பிற்பாடு 2014.11.28ஆம் திகதி மாவனெல்ல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரச நிறுவனங்கள் 7லிலும் 2014.12.05 திகதி கேகாலை மாவட்டத்திற்கு உட்பட்ட அரச நிறுவனங்கள் 11லும் மேற்பார்வை இடம்பெற்றன. 2014.12.11 ஆம் திகதியில் மாத்தளை மற்றும் உக்குவெலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அரச நிறுவனங்கள் 10 மற்றும் 6 இல் மேற்பார்வை இடம் பெற்றன. விமர்சன ரீதியான மேற்பார்வைக்கு அமைவாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.3. உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களை அரச மொழிக் கொள்கை தொடர்பாக அறிவூட்டல்



அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரச உத்தியோகத்தர்கள் பொது மக்கள் மட்டுமன்றி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக அறிவினைப் பெறுவதன் அவசியத்தை உணர்ந்த இவ் அமைச்சானது இது தொடர்பாக நிகழ்ச்சிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கேற்ப 2013 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாண உத்தியோகத்தர்கள் மற்றும் 2014 ஆம் வருடத்தில் வடமேல் மற்றும் தென் மாகாணங்களை முன்னிலைப்படுத்தி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியிருந்தது. அதற்கேற்ப அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தல் 2014.10.10 ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் பசறை முகாமைத்துவ நிறுவனத்தில் ஊவா மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்கள் சார்பாக வெற்றிகரமாக நடைபெற்றது. ஊவா மாகாண சபை அரச நிறுவனங்களின் அரசகரும மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டுள்ள 125 உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### 1.4. அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கூட்டுறவு மற்றும் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ரீதியான செயலமர்வு

அரச உத்தியோகத்தர்களின் அரசகரும மொழித் தேர்ச்சியை முன்னேற்றுவதற்கு அமைவாக உள்ளடக்கப்பட்ட அதிகாரிகள் குழு அறிக்கைக்கு அமைய வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 04 2014 அமைய உத்தியோகத்தர்கள் சார்பாக அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்வில் அடிப்படை விடயமாக அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக உத்தியோகத்தர்களின் தெளிவுபடுத்தலில் முன்னேற்றம் காணப்பட்டது. அதன் கீழ் 2014.11.28 ஆம் திகதி கூட்டுறவு மற்றும் உள்ளக வியாபார அமைச்சின் கீழ் உள்ள பாவனையாளர் சேவை அதிகாரி மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் 100 பேரை தெளிவுபடுத்தும் நிகழ்வு இடம்பெற்றதுடன் அதிகாரிகள் 100 இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். மேலும் அரசகரும மொழிக்கொள்கை மற்றும் அது தொடர்பான சட்டங்கள் தொடர்பாக பேராசிரியர் திரு. பிரதிபா மகாநாம ஹேவா அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டது. அமைச்சுக்கு உட்பட்ட நிறுவனங்களின் பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பாகவும் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தும் போது அந்தந்த நிறுவனங்கள் எதிர்நோக்கும் முரண்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

## 1.5. தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்கு அமைவாக இடம்பெற்ற செயற்பாடுகள்

அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பாடசாலை அடிப்படையாகும். இதற்கேற்ப 2014/2015 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு அமைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளை கீழே காண்க.

| காலம் | பாடசாலை தொகை | மாணவர்கள் தொகை |
|---|---|---|
| 2014.01.06 முதல்2014.02.10 வரை | 03 | 860 |
| 2014.10.10 முதல் 2014 11.19 வரை | 07 | 1005 |

2014 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்கு அமைவாக கேகாலை மாவட்ட பாடசாலை வாசிகசாலைகளுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன. அறிவுப்போட்டிக்கான தேவையான வினாக்கள் தயாரிக்கப்பட்டன. கேகாலை மாவட்டத்தின் பத்து வாசிகசாலைகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்கான பணம் வழங்கப்பட்டன.



தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியின் போது வினா விடை போட்டிக்கு பங்குபற்றிய மாணவ மாணவிகளுக்கு மும்மொழி அகராதி வழங்கப்பட்டன. 2015ஆண்டு தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்கு அமைவாக பாடசாலை வாசிகசாலைகளுக்கான சிங்கள தமிழ் ஆங்கில புத்தகங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மும்மொழி அகராதிகள் 750 கொள்வனவு செய்யப்பட்டன.

## 1.6. அமைச்சின் செய்தி மடல் ஒழுங்கமைத்தல்

இந்த நிகழ்ச்சியின் முக்கிய கருப்பொருளானது அசைச்சின் நோக்கம் தொடர்பாகவும் மொழிக் கொள்கை மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கை தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டல்.அதற்கேற்ப 2014 ஆண்டுக்கு 4 வெளியீடுகள் வெளியிடப்படவிருந்தன அதில் 2 வெளியிடப்பட்டு முடிவுற்றுள்ளது.

# 2. மும்மொழி இலங்கைக்கான நிகழ்ச்சிகள்

## 2.1. தொடர்பாடல் ஊடகம் மூலமாக தேசிய மொழிகளை மேம்படுத்தல்

வானொலி நிகழ்ச்சிகள் கேட்பவர்களுக்கு அமைச்சின் பணிகள் தொடர்பாகவும் மொழிக் கொள்கை மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கை தொடர்பாக விழிப்புணர்வை ஊட்டல். இந் நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். அதற்கேற்ப சிங்களம் மற்றும் தமிழில் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவை மற்றும் தென்றல் அலைவரிசை ஊடாக ஒலிபரப்பப்படுகின்றது.(ஒவ்வொறு ஜாயிறு தினங்களிலும் மு.ப10.30 முதல் 11.00வரை ஒலிபரப்பப்படும்).இது வரையில் 52 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளதுடன் ஒவ்வொறு புதன் கிழமைகளிலும் அமைச்சில் ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2.2. மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயங்களில் இரு மொழி உதவு நிலையங்கள் உருவாக்குதல்

அரச நிறுவனங்களில் பொது மக்கள் தாம் விரும்பிய மொழியில் சேவையை பெற்றுக்கொள்ளும் வாய்பை இலகுபடுத்துவதை நோக்கமாக கொண்டு 2012 தொடக்கம் இரு மொழி உதவு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் இதுவரையும் 72 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலகங்களில் 72இரு மொழி உதவு நிலையங்கள் இவ் அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்பட்டுள்ளது.பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் முகமாக பிரதேச செயலக காரியாலயங்களுக்கு இவ்



அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013 ஆம் வருடத்தில் இவ்விடயத்தில் இன்னுமொரு படி மேலாக மாவட்ட செயலாளர் காரியாலயங்கள் 19 இல் இரு மொழி உதவு நிலையங்கள் அமைத்து வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் வருடத்தில் இரு மொழி பிரதேச செயலகங்கள் 6 இலும் மாவட்ட செயலகங்கள் 8 இலும் இரு மொழி உதவு நிலையங்கள் அமைக்க தீர்மாணிக்கப்பட்டது. அதற்கேற்ப வவுனியா, மொணராகலை, களுத்தறை, மன்னார், நுவரெலியா, கண்டி, கடவத்சதர, இரத்தினபுரி, லாகுகல, மாத்தறை, முல்லைத்தீவு, கேகாலை, குருநாகல் போன்ற மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரு மொழி உதவு நிலையங்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கான இரு மொழி உதவு நிலையத்துக்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3. அரச சேவை இருமொழியாக்கல்

அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு அமைவாக அரச சேவையை வலுப்படுத்தும் முகமாக 2009.11.25 ஆம் திகதி அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2009 அரசமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அனைத்து அரச நிறுவனங்களிலும் பிரதான அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசகரும மொழி நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் மத்தியில் தமது நிறுவனத்தில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்த பூரண பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 2010.09.01ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2010 ஊடாக அரச நிறுவனங்களின் கடித தொடர்புகளின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக பொது மக்கள் தாம் விரும்பிய






மொழியில் சேவையை பெற்றுக் கொள்வதற்கு அரச சேவையில் சிறந்த நிர்வாகத்துக்கான திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.2014.01.21 திகதி அரச நிர்வாக சுற்றறிக்கை 01/2014 அரச உத்தியோகத்தர்கள் மூலம் அடையப்பட வேண்டிய அரச மொழித்தேர்ச்சி மற்றும் அது தொடர்பான விடயங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளதுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை அறிந்து கொள்ளல் மற்றும் சேவை வழங்குவதன் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்தோடு அரச உத்தியோகத்தர்கள் மூலம் பெற வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சி




தொடர்பாக விடயங்கள் ஆராயப்பட்டு அனுமதி வெளியிடுவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழு அறிக்கை மூலம் அனுமதி 28 தொடர்பாக

குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து விடயங்கள் ஒன்றாக்கப்பட்டு அரசசேவை இருமொழியாக்கல் அமைவாக இது வரை அரசின் மூலம் கொண்டுவரப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக திருப்பதிகரமான தெளிவினைப் பெற வேண்டும்.

அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் சமூக ஒருமைப்பாடு தொடர்பான அமைச்சுக்கு உள்ள தொடர்புகள் தொடர்பான கூட்டம் 2014.09.01 திகதி அமைச்சுகளின் செயலாளர்கள் மத்தியில் இடம்பெற்றது. பிரதான விசேட அதிதியாக கௌரவ அமைச்சர் கலந்து கொண்டார். அரசகரும மொழிக் கொள்கை சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கை இன ஒற்றுமை தொடர்பாக முன்வைக்கப்பட்டது. கலந்துரையாடல் நிகழ்வு செயலானரின் தலைமையில் இடம்பெற்றது. அமைச்சுகளின் செயலாளர்கள் 40 பேர் உட்பட மேலும் 128 பேர் கலந்து கொண்டனர். இது தொடர்பாக நிதி அனுசரனை FLICT நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

## 3. இரு மொழி மக்கள் செயற்பாட்டு நிகழ்ச்சி

### 3.1. மொழிச்சங்கங்கள் உருவாக்குதல்

இரு மொழிகளால் இதயபூர்வமாக இணைந்த சமாதானம் மிக்க ஒரே இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு அரசகருமமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சியாக மொழிச்சங்க தேசிய திட்டத்தை குறிப்பிடலாம். இந்நிகழ்ச்சி 2012 வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 2428 மொழிச்சங்கங்கள் இலங்கை பூராவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு சமமாக பொது மக்கள் மத்தியில் சிங்கள தமிழ் மொழிகளில் கற்பதற்கான வாய்ப்பினை முன்னேற்றுவதுடன் இருமொழிகளை மேம்படுத்துவதை நோக்கமாக நோக்கமாகக் கொண்டு மொழி வகுப்புகள் 206 ம் மாவட்டங்கள் 25ஐ உள்ளடங்கும் விதமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப பொது மக்கள் தமது பிரதேசத்தில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றுக்கொண்ட புரிந்துணர்வானது சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்தது.

மொழிச்சங்கங்கள் ஊடாக நடைபெறும் இன்னுமொரு முக்கிய விடயமாக



இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் தேசிய ஒற்றுமை ஒருமைப்பாடு மற்றும் ஒவ்வொருவருக்கிடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக சிங்கள தமிழ் தேசிய விழாக்கள் ஒழுங்குபடுத்தல் இளைஞர் பங்குபற்றல் நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தல்.



மொழி புரிந்துணர்வின் ஊடாக சுயதொழில் வாய்ப்புக்கான நிகழ்ச்சிகள் நடாத்துதல். சிங்கள தமிழ் உறவுகளை வலுப்படுத்த முகாம்கள் மற்றும் மொழிப்பட்டறைகள் நடைமுறைப்படுத்தல்.

### 3.2. மொழிச்சங்க செயற்பாட்டு இயந்திரத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் மொழிச்சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தல்.

மொழிச்சங்க செயற்பாட்டை வினைத்திறத்துடன் முன்கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும் அதற்கேற்ப 2014.04.21 கௌரவ அமைச்சரின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. அமைச்சு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் நிதி அமைச்சுகளை பிரதிநிதித்துவப்படுத்தி உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர். மொழிச்சங்கங்களில் ஆரம்பம் முரண்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மொழிச்சங்க செயற்பாடு தொடர்பான நிகழ்ச்சிகள் கீழ் மொழிச்சங்க பிரதேச மாநாடுகள் 2014.05.10ஆம் திகதி குருவிட, இரத்தினபுரி 2014.05.27ஆம் திகதி ஓபநாயக, கொடகவெல 2014.05.30ஆம் திகதி பலாங்கொடை ஆகிய பிரதேச செயலக காரியாலயங்களில் வெற்றிகரமாக இடம்பெற்றன. 2014.07.11 திகதி தனமல்வில பிரதேச செயலக காரியாலயத்தில் மொழி மாநாடு இடம்பெற்றது. தனமல்வில புத்தள வல்லவாய போன்ற பிரதேசங்களின் மொழிச்சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். அந்த பிரதேசங்களின் மொழிச்சங்கம் தொடர்பான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. இரத்தினபுரி மாவட்ட மொழிச்சங்கம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு 2014.09.12 திகதி இடம் பெற்றது. இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் மொழிச்சங்க பயிற்சி ஆசிரியர்கள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் 35 பேர் கலந்து கொண்டனர். 2014.10.14 திகதி எம்பிலிபிடிய மொழிச்சங்க மாநாடு இடம் பெற்றது. 70 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மொழிச்சங்க முரண்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மொழிச்சங்க பிரதேச செயலமர்வு மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து விடயங்களும் மீளாய்வு செய்யப்பட்டு மாகாண மத்திய நிலையத்தில் முகாமைத்துவ திட்டம் ஒழுங்கமைப்பதற்கு உபயோகிக்கப்படவுள்ளது.

### 3.3. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்கு அமைவாக மொழிச்சங்கள் மூலமாக முன்வைக்கப்படும் நிகழ்சித்திட்டங்களுக்கு அமைவாக நிதியுதவி வழங்குதல்

இந்த அமைச்சின் நோக்கங்களை இலங்கை பூராகவும் நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. திட்டமிடும் போது இது தொடர்பாக 200 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. அதற்கேற்ப இரத்தினபுரி கம்பஹா பதுளை நுவரெலியா பொலநறுவை மற்றும் கண்டி மொழிச்சங்கங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட தைப்பொங்கள் விழாவுக்கான நிதியுதவி வழங்கல். களனி மொழிச்சங்கம் மூலம் நடைபெற்ற தமிழ் மொழி ஒரு நாள் செயலமர்வுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. திம்புலாகல வசந்த உதாணய பொலநறுவை மிகார மாதா மொழிச்சங்க உத்தியோகத்தர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். மொழிச்சங்க இணக்க முகாம் மற்றும் செயற்பாட்டு சிரமதானப் பணிகள் ருவன்வெல்ல மல்லிகா மொழிச்சங்கம் மூலம் நடைபெற்றது. குருநாகல் மாவட்ட ஹொரம்பாவ மொழிச்சங்கங்கள் இணைந்து தரிசித்தல் மற்றும் கலை நிகழ்வுகளை வெற்றிகரமாக செயற்படுத்தியது. இரத்தினபுரி மீடிபொல மத்திய மகா வித்தியாலயத்தின் புணரமைப்பு முகாம் மற்றும் பல்வகை கலாசார நிகழ்வு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் மீடிபொல சரஸ்வதி மொழிச்சங்க உறுப்பினர்கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். மேலும் பொலநறுவை மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச மொழிச்சங்கங்கள் இணைந்து **புலதிசி மிதுதம் சுற்றுலா நிகழ்ச்சியினை** ஒழுங்கு செய்திருந்தது.

கண்டி உடபளாத ரண்தரு கலாசார பகிர்வு நிகழ்ச்சிகள் அந்த பிரதேசத்தில் உள்ள அனைத்து மொழிச் சங்கங்களும் இணைந்து செயற்படுத்தியது. மீரிகமவில் அனைத்து மொழிச் சங்கங்களினதும் சிங்கள தமிழ் உறுப்பினர்கள் இணைந்து பல்கலாசார புத்தாண்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தது. கஸ்பேவ அனைத்து மொழிச்சங்கங்களும் இணைந்து தேசிய ஒற்றுமைக்கான சிங்கள தமிழ் பக்மஹா

விழாவுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. தெஹிவலை மொழிச்சங்க உறுப்பினர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சமாதான நிகழ்வு தெஹிவலை பிரதேச செயலக காரியாலய ஏற்பாட்டில் வெற்றிகரமாக இடம்பெற்றது. இரண்டாம் கட்ட 15 செயற்பாட்டுத்திட்டங்களுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. யூலை மாதம் நிகழ்ச்சித்திட்டம் 26க்கான நிதியுதவி வழங்கப்பட்டது. இரத்தினபுரி பதுளை மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. குருநாகல் மொழிச்சங்கங்கள் இணைந்து ஒழுங்குபடுத்திய சிங்கள தமிழ் மொழி தின போட்டிக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. மாத்தளை, பதுளை, குருநாகல், சீதாவாக்க, மற்றும் களனி பிரதேச செயலக திட்டங்களுக்காக நிதியுதவி வழங்கப்பட்டது.மொழிச்சங்கங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் இன்னொரு செயற்பாடாக இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்பவர்கள் மத்தியில் ஒற்றுமை சகோதரத்துவம் மற்றும் இனங்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சிங்கள தமிழ் விழாக்களை ஒழுங்கமைத்தல்.இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தல் மொழியை கற்பதன் ஊடாக சுயதொழில் வாய்ப்புக்கான வசதிகளை ஏற்படுத்தல் சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பட்டறைகள் ஏற்படுத்தல்.மொழிப் பட்டறைகளை ஏற்படுத்தல்.

### 3.4. தேசிய மொழிகளை மேம்படுத்துவதற்கு அமைவாக புத்தகங்கள் மொழிபெயர்த்து வெளியிடுதல்



பொது மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் இரு மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அதன் கீழ் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க அவர்களால் எழுதப்பட்ட சிங்கள தமிழ் ஆங்கில கதைகள் மொழிபெயர்ப்புக்காக நிதியுதவி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி பேராதனை பல்கலைக்கழகம் கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் சபரகமுவ பல்கலைக்கழக நிறுவனங்களில் இடம் பெற்றது. சிறுகதை புத்தகங்கள் 10 தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. ஹெஜ்ஜி மாலய எனும் சிறுவர் நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு கிட்டியும் கழுத்து மணிமாலையும் என நாவலின் 1000 பிரதிகளும், கோழி அம்மாவும் மயில் குஞ்சுகளும் நாவலின் சிங்கள மொழி பெயர்ப்பு கிகிலி அம்மா சஹ மொணரா பெடவ் நாவலின் 1000 பிரதிகள் பதிப்பிக்கப்பட்டது. அத்தோடு சிங்கள தமிழ் சிறுகதை தொகுப்புகள் இரண்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன் அதில் 1000 வீதம் பதிப்பிப்பதற்காக திட்டமிடல் பிரிவில் வழங்கப்பபட்டுள்ளது.

## 4. தேசிய மொழிகள் திட்டத்துடன் இணைந்து நடாத்திய செயற்பாடுகள்

### 4.1. அரசகரும மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக நிகழ்ச்சிகள் திட்டமிடல் தலைமைத்துவ மற்றும் நிறுவனத்தை பலப்படுத்த தொடர்பாக மொழிப்பிரிவுக்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

அமைச்சின் உத்தியோகத்தர்களின் தேர்ச்சியை மேம்படுத்துவதன் ஊடாக மொழிப்பிரிவு உத்தியோகத்தர்களின் கணிணி அறிவை மேம்படுத்தும் முகமாக தேவையான



கற்கைநெறிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.ஆண் பெண் பால் நிலை சமத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி ஊடாக தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் இணைப்பாளர் மற்றும் உதவுனர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி சிங்கள தமிழ் மொழி மூலம் 02 2014.09.18 மற்றும் 19 திகதிகளில் இடம் பெற்றது. 73 உத்தியோகத்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் 43 பேர் மட்டுமே கலந்து கொண்டனர்.2014.10.27 ஆம் திகதி கிளிநொச்சி 'Friends Inn' யிலும் 2014.10.29ஆம் திகதி கண்டி 'Hotel Suisse' யிலும் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் இணைப்பாளர் உதவுனர் உத்தியோகத்தர்கள் அறிவூட்டும் நிகழ்ச்சி சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான செயலமர்வுகள் கிளிநொச்சி மற்றும் கண்டி மாவட்டங்களில் இடம் பெற்றன.

அத்தோடு 2014.11.20 ஆம் திகதி தேசிய மொழிகள் திட்டத்துடன் இணைந்து பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. அமைச்சு அரசகரும மொழிகள் திணைக்களம் அரசகரும மொழிகள் ஆணைக்குழு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அமைச்சின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.செயலமர்வில் செயலாளர் கலந்துகொண்டனர்.அத்தோடு தேசிய மொழிகள் திட்டம் தொழில்நுட்ப ஆலோசகர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 2015 வருடம் 3 மாதங்களுக்கான தேசிய மொழிகள் திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படும் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகள் சார்பான செயற்பாடுகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி 03 நடாத்தப்பட்டது. அதற்கேற்ப 2014.06.16 திகதி முதல் 2014.06.20 வரை சிங்கள மொழி மூலமான செயலமர்வும் 2014.06.23 திகதி முதல் 2014.06.27 ஆம் திகதி வரை தமிழ் மொழி மூலம் செயலமர்வும் 2014.07.28 ஆம் திகதி முதல் 2014.08.01 திகதி வரை சிங்கள மொழி மூலமும் இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சியில் மனித வள விசேட தணஞ்சய ஹெட்டிஆரச்சி அவர்கள் மற்றும் சபீரா கபூர் அவர்கள் இதில் வளவாளர்களாக கலந்து கொண்டனர். பயிற்சி கைநூல் ஒழுங்கமைவதற்கு அமைவாக நடவடிக்கைகள் அமைச்சின் வழிகாட்டலில் இடம் பெற்றது. அதற்கேற்ப செயலமர்வுகள் 03 வெற்றிகரமாக இடம்பெற்றது.சிங்கள மொழி மூலம் 49 உத்தியோகத்தர்களும் தமிழ் மொழி மூலம் 22 பயிற்சி பெற்றனர்.அங்கு பேச்சுத்திறமை வெளிப்படுத்தல் முன் வைத்தல் நிகழ்ச்சிகளை நடாத்துதல் செயலமர்வுகள் நடாத்துதல் தொடர்பாக நடைமுறை சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கை பூராகவும் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு உள்வாங்கப்படுவர்.

அமைச்சின் கொள்கை ஆய்வு மற்றும் மேற்பார்வை பிரிவினை வளமூட்டும் விதத்தில் ஆய்வு முறைமை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி 2014.10.16 திகதி முதல் 2014.11.05 திகதி வரை மார்கா நிறுவனத்தில் இடம் பெற்றது. அமைச்சு மற்றும் அதன் உள்ளக நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் 30 பேர் கலந்து கொண்டனர். ஆய்வு முறைமை மற்றும் ஆய்வு அறிக்கை தயாரித்தல் தொடர்பான அறிவு வழங்கப்பட்டது. 2014.11.10திகதி மேற்பார்வை தொடர்பான புத்தி ஜீவிகள் குழுக் கூட்டம் இடம் பெற்றது. கனடா விசேட அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். மேலும் அமைச்சின் கொள்கை மற்றும் ஆய்வு மேற்பார்வை பிரிவுகளுக்கான கணணி மற்றும் பதிப்பு (Printer) உபகரணங்கள் வழங்கப்பட்டது.

### 4.2. அரச நிறுவனங்களில் மொழித்திட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு அமைவாக வழிகாட்டிக் கைநூல் ஒழுங்கமைப்பதற்கு அமைவான நிகழ்ச்சிகள்

அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2009 ஊடாக நிருவன பிரதானிகளுக்கு அரச மொழிக் கொள்கை செயற்படுத்துவதற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மிகவும் சிறந்த முறையில் செயற்படுத்த

எமது நிறுவனத்தின் மொழித்திட்டம் ஒழுங்கமைப்பதற்கு அமைவாக 2013 ஆம் வருடத்தில் மொழி வழிகாட்டிக் கைநூல் அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டது. இதற்கான தொழில் நுட்ப மற்றும் நிதியுதவிகள் கனேடிய நிதியுதவியின் கீழ் இயங்கும் தேசிய மொழிகள் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. வழிகாட்டிக் கைநூலின் பிரதிகள் 3000 பதிப்பிக்கப்பட்டுள்ளது. வழிகாட்டிக் கைநூலில் அரச நிறுவனங்களில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறைமைகள் தொடர்பாக அடிப்படை படிமுறைகள் 04 மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு அவசியமான முறையான திட்டங்கள் அரச நிறுவனங்களில் உள்வாங்கப்படுவதன் ஊடாக பொது மக்களுக்கு இரு மொழி சமமான வாய்ப்பினை வழங்குவதற்கான வாய்ப்பினை வழங்குவதுடன் பொது மக்களின் நிதியானது சிறந்த வகையில் பாவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

தற்போது இந்த அமைச்சின் மூலம் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற மொழி தொடர்பான அறிவூட்டலின் போது இந்த மொழிக் கைநூல் வழங்கப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் மொழி தொடர்பாக அறிவூட்டல் செயலமர்வின் போது இக் கைநூல் வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு வழித்தட திட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான அமைச்சுகள் 06 மற்றும் அதன் நிறுவனங்கள் மத்தியில் மொழித்திட்டம் ஒழுங்கமைக்கும் திட்டம் இவ் அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

### 4.3. அரசகரும மொழிக் கொள்கை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக வழித்தட திட்டம் (Road Map) அமைத்தல் மற்றும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளை (Accountability Framework) ஒழுங்கமைத்தல்

அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவான வழித்தட திட்டம் அரசகரும மொழிக் கொள்கை திறம்பட செயற்படுத்துவதற்கு அமைவாக அமைச்சு மற்றும் திணைக்களங்கள் அனைத்து அரச நிறுவனங்களினதும் பூரண ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது அத்தியாவசியமான கருத்தாகும். இந்த கருத்தை முதனிலைப்படுத்தி இந்த அமைச்சின் மூலம் 2012 ஆம் ஆண்டு வழித்தட திட்டம் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்தல் இடம்பெறுகின்றது. வழித்தட திட்டம் மூலம் அந்தந்த அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு ஐந்தாண்டு குறுகியகால மற்றும் நீண்ட கால உபாய மார்க்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இந்த அமைச்சின் மூலம் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் 2016-2020 வரையாகும்.

வழித்தட திட்ட நிகழ்ச்சியின் அடிப்படை மூலம் பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய சேவை வழங்கும் வகையிலான 16 பிரதான அமைச்சுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சுகளுக்கிடையில் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு கல்வி அமைச்சு தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு சுகாதார அமைச்சு நீதி மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு பிரதான இடம் வகிக்கின்றது.

இந்த அமைச்சின் ஏனைய நிறுவனங்களான அரசகரும மொழிகள் திணைக்களம் அரசகரும மொழிகள் ஆணைக்குழு தேசிய மொழிக்கல்வி







மற்றும் பயிற்சி நிறுவனம் இவ் ஐந்தாண்டு திட்டத்தை ஒழுங்கமைத்து முடித்துள்ளது. இச் செயற்பாட்டு திட்டத்துக்கு ஏற்ப அடிப்படை நிகழ்ச்சி ஆரம்பம் 2015 வருடம் இடம் பெறுவதுடன் வழித்தட திட்டம் செயற்படுத்தல் 2016 வருடத்தில் இருந்து எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. வழித்தட திட்டம் நிகழ்ச்சிக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட 16 பிரதான அமைச்சுகள் மற்றும்

அதற்கமைவான அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக அடிப்படை தரவுகள் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படை தரவுகள் மூலம் அந்த தகவல்கள் ஒன்றிணைக்கப்பட்டு தேவையான விடயங்கள் ஆராய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 4.4. பிரதேச சேவைகள் ஊடாக புத்தாக்க மாதிரிகளை கட்டியெழுப்புதல்

2014 வருடத்தில் இந்த அமைச்சின் மூலம் குறிப்பிடப்பட்ட புத்தாக்க மாதிரிகள் தொடர்பாக 08 மேற்பார்வை பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் அரசமொழிக் கொள்கை வினைத்திறத்துடன் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இது தொடர்பான மாதிரி நிறுவனங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சியாக இந்த புத்தாக்க மாதிரிகளை குறிப்பிடலாம். அதற்கேற்ப 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை இலங்கையில் பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள் பிரதிநிதிப்படுத்துவதன் ஊடாக புதிய புத்தாக்க மாதிரிகள் 14 இது வரை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாநகர சபைகள் -கொழும்பு நுவரெலியா பதுளை காலி



- நகர சபை –வவுனியா திருகோணமலை
- பிரதேச சபை –கந்தளாய்
- வைத்தியசாலைகள் - திருகோணமலை காலி பேராதனை
- பிரதேச செயலகம் - பண்டாரவலை
- பொலிஸ் நிலையம் -நுவரெலியா திருகோணமலை வவுனியா

2014ஆம் வருடத்தில் இந்த அமைச்சின் மூலமாக மேற்குறிப்பிட்ட புத்தாக்க மாதிரிகள் 08 மேற்பார்வை பயணம் மேற்கொள்ளப்பட்டது.



அதன் மூலம் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக அந்த நிறுவனங்கள் எதிர் நோக்குகின்ற முரண்பாடுகள் இணங்கண்டு அமைச்சின் மூலம் வழங்கக் முடியுமான சேவை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். அத்தோடு புத்தாக்க மாதிரி இரு மொழி பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்கு விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த வருடத்தில் ஆசிய அபிவிருத்தி மன்றத்தின் தொழில்நுட்ப அனுசரனையின் கீழ் இந்த நிகழ்ச்சிகளை முன்னெடுக்க அமைச்சு முன்வந்துள்ளது.

### 4.5. மாகாண மத்திய நிலையங்கள் ஸ்தாபித்தல்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களினது சேவைகளை மாகாண மட்டத்தில் வழங்குவதன் ஊடாக




அதன் சேவைகளை விரிவு படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டமாக இம் மாகாண மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளதை குறிப்பிடலாம். இது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவும் 2013.08.29 திகதி நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.அதற்கமைவாக இவ் அமைச்சின் மூலம் 2013 ஆம் வருடத்தில் வடமாகாண மத்திய நிலையம் கிளிநொச்சியிலும், சபரகமுவ மாகாண மத்திய நிலையம் குருவிட்டவிலும் ஆரம்பிக்கப்பட்டது.

2015 ஆம் வருடத்தில் மத்திய மாகாண நிலையம் கண்டி மாவட்டத்திலும், கிழக்கு மாகாண நிலையம் மட்டக்களப்பு மாவட்டத்திலும், தென் மாகான மத்திய நிலையம் மாத்தறை மாவட்டத்திலும் ஸ்தாபிக்கப்படவுள்ளது. வடமேல் வடமத்திய மற்றும் ஊவா மாவட்டங்களுக்கான மாகாண மத்திய நிலையம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாகாண மத்திய நிலையத்தின் முன் ஏற்பாட்டில் மொழிச்சங்க ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கும் நிகழ்வு 2014.12.13 திகதி முதல் 17 ஆம் திகதி வரை இடம் பெற்றது. பயிற்சிக்காக பாடசாலை ஆசிரியர்கள் அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தனியார் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மொழிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 31 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி நிறைவின் பின்னர் இவர்கள் வட மாகாண மொழிச்சங்க வகுப்புகளுக்கு கற்பித்தலுக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

## 4.6. பொது மக்கள் பங்குபற்றல் நிதி

பொது மக்கள் பங்குபற்றல் நிதியின் மூலம் தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் பிரதான காரியங்கள் 02ற்காக அமைச்சுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

- 2013 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மொழிச்சங்க செயற்பாட்டு இணைப்பு நிலையங்கள் 05 திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கல்.
- 2014 வருடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மொழிச்சங்க செயற்பாட்டு இணைப்பு நிலையம் 05 திட்டங்களுக்காக நிதியுதவி வழங்குதல்.

இதன் முதல் செயற்பாட்டின் கீழ் எஹலியகொடையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மொழிச்சங்க செயற்பாட்டு இணைப்பு நிலையம் மூலம் முன்வைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக நிதியுதவி வழங்கப்பட்டது. அத்தோடு இரத்தினபுரி மாவட்ட செயற்பாட்டு இணைப்புக் குழு 05 உருவாக்கப்பட்டது. (குருவிட்ட இரத்தினபுரி பலாங்கொடை கொடகவெல ஓபநாயக) வவுனியாவிலும் மாவட்ட மொழிச்சங்க செயற்பாட்டு குழு உருவாக்கப்பட்டது .2014.11.03 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. கஹடஸ்திலிய செயற்பாட்டுக் குழு மூலம் முன்வைக்கப்பட்ட திட்டத்துக்காக தேசிய மொழிகள் கருத்திட்ட நிறுவனம் மூலம் ரூ.140 000 நிதியுதவி வழங்கப்பட்டது.

இரண்டாம் செயற்பாட்டின் கீழ் பதுளை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மொழிச்சங்க செயற்பாட்டு இணைப்பு நிலைய நிகழ்ச்சித்திட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நிதியுதவி வழங்கப்பட்டது. பதுளை செயற்பாட்டு நிலையம் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட சிங்கள தமிழ் புதுவருட பல்கலாசார பல்வகைத்தன்மை நிகழ்வுக்காக தேசிய மொழிகள் திட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். 2014.09.12 ஆம் திகதி குருவிட்ட மொழிச்சங்க செயற்பாட்டு இணைப்புக் கூட்டம் இடம் பெற்றது. குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவின் மொழிச்சங்க நிகழ்ச்சிகளுக்கு அமைவாக முரண்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. 2014.09.15 ஆம் திகதி கிளிநொச்சி மொழிச்சங்க செயற்பாட்டுக் குழு உருவாக்கப்பட்டது.

கஹடகஸ்திகிலிய மொழிச்சங்க செயற்பாட்டு நிலைய உறுப்பினர்களின் தேர்ச்சி மட்டத்தை வளப்படுத்தல் தொடர்பாக அடிப்படை கலந்துரையாடல் 2014.02.18 ஆம் திகதி இடம் பெற்றது. 2014.02.28 -2014.03.02 திகதி வரை கஹட்டகஸ்திகிலிய மொழிச்சங்க செயற்பாட்டு நிலைய உறுப்பினர்களின் தேர்ச்சி மட்டத்தை வளப்படுத்தல் இடம் பெற்றது. அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளக செயற்பாட்டு நிகழ்ச்சிகள் (2014.09.13 மற்றும் 14 இளைஞர் முகாம் யாழ்ப்பாணம் (SOND நிறுவனம்) 2014.09.16 மற்றும் 17 திகதிகளில் இளைஞர் முகாம் கந்தளாய் - RECDO நிறுவனம் மூலம் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக அமைச்சின் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். கரைச்சி மொழிச்சங்க செயற்பாட்டுக் குழு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 03.2 சமூக ஒருமைப்பாட்டுப் பிரிவு

அறிமுகம்

ஒரு நாட்டிலே வாழுகின்ற அனைவரும் அந்நாட்டின் பிரசைகள் எனக்கொண்டு அனைவரும் வாழ்வதற்கான சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதானது அந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவும். அப்பணியினை நிறைவேற்றுவதற்கு சீரான பாதையொன்றினை தயாரித்தல் வேண்டும். அதாவது தெளிவான கொள்கை ஒன்றினுள் செயலாற்றுதல் வேண்டும். சமூக ஒருமைப்பாட்டிற்கு நாட்டிலே கொள்கையொன்று இருக்கவில்லை. எனவே அதனைத் தயாரிப்பதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு முன்வந்தது. சமூக ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதற்கான பங்குதாரர்களாக அனைத்து பிரசைகளிடமும் காணப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் உணர்வுகள் என்பவற்றின் மீது விளக்கத்துடனும் மற்றும் ஒருங்கிணைப்புடனும் வளர்ந்த நன்நெறிகள், கல்வி மற்றும் வலுவூட்டல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட சமூகமொன்றினை உருவாக்குதல், சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை வலுவூட்டுவதன் மூலம் அனைவரையும் சமூகமயமாக்குவதே இக்கொள்கையின் நோக்கமாகும். அதன் போது சமூக ஒருமைப்பாட்டு செயற்பாட்டிற்கு வசதியளிக்கும் போது இடை ஊடகங்களாக மொழி தொடர்புகள் மற்றும் சமூக பொறுப்புக்களில் ஈடுபட்டுள்ள பொது ஊடகமொன்றில் காணப்படுகின்ற முக்கியத்துவம் என்பவற்றினை இனங்காணுவதும் இதன் நோக்கமாகும்.

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**சமூக ஒருமைப்பாடு பிரிவுக்கான பொருளாதார முன்னேற்றம்**




| தொ/இல | செயற்பாடு | உத்தேசிக்கப்பட்ட தொகை | உண்மைச் செலவு | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | சமூக ஒருமைப்பாட்டு தேசிய கொள்கையினை குறித்த பங்காளர்களின் ஊடாக செயற்படுத்தல் | 1,800,000.00 | 1,392,148.00 | 77.34% |
| 02 | சமூகத்திலே இலகுவில் பாதிப்பிற்கு ஆளாகிய மக்களை வலுப்படுத்துதல், சமூகத்தினருக்கிடையே அவர்களுக்கு இருக்கும் திறன் மற்றும் அவர்களை சமூகத்தினருடன் இணைத்துக்கொள்வதனை உறுதிப்படுத்துவதன் ஊடாக அக்குழுவினருக்கிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பமுடியும். | 3,300,000.00 | 3,493,768.00 | 105.87% |
| 03 | சமூகத்திற்கிடையே அவர்களது ஆளடையாளத்தை பாதுகாத்தல் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வினை விருத்தி செய்தல் என்பவற்றிற்காக அதன் முக்கியத்துவம் பற்றி அறிவூட்டல் | 6,900,000.00 | 6,859,187.00 | 99.40% |
| | மொத்தம் | 12,000,000.00 | 11,745,103.00 | 97.87% |

## சமூக ஒருமைப்பாட்டு பிரிவின் செயற்பாடு

### 1. சமூக ஒருமைப்பாட்டு வாரம்



2014 ஆம் ஆண்டிலும் நாடளாவிய ரீதியில் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை அமுல்படுத்துவதற்காக 2014.07.10 ஆம் திகதிய இலக்கம்: அப/14/0883/520/006 உடைய அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

இதன் பிரகாரம் "சமூக ஒருமைப்பாட்டின் ஊடாக தேசிய ஒற்றுமை" எனும் தொனிப்பொருளின் கீழ் சமூக நலன்புரி வசதிகள், கல்வி, கலை மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றினை உள்ளடக்கிய சமூக ஒருமைப்பாட்டு வாரமானது 2014.07.14 ஆம் திகதி முதல் 2014.07.20 ஆம் திகதி வரையில் நாடு முழுவதிலும் இடம்பெற்றது.

பிரதேச மட்டத்திலான சமூக மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். மக்களின் ஊழியப் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டு முன்பள்ளிகள், சிறுவர் பூங்காக்கள், சுகநல சேவைகள், முதியோர் இல்லங்கள், பகல் நேர பராமரிப்பு நிலையங்கள், ஜனசமூக நிலையங்களை புனரமைத்தல், குடிநீர் வசதிகளை ஒழுங்கு செய்தல், பாலங்கள், வீதிகள், பாடசாலைக் கட்டடங்களை புனரமைத்தல் உள்ளிட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 2014 ஆம் ஆண்டிலே ஒரு மாவட்டத்தில் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டு வீதம் 46 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சமூக மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக புனரமைப்புச் செய்யப்பட்ட முன்பள்ளி

நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நிகழ்ச்சித் திட்டமானது சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் மற்றுமொரு பிரதான நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். இதனூடாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் மாதிரி வினா விடை பற்றி கலந்துரையாடுவதற்கும் மற்றும் பதில் எழுதும் முன்னாயத்தப் பயிற்சி ஒன்றினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டமானது ஒரு மாவட்டத்திற்கு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் வீதம் அமுல்படுத்தப்பட்டது. எனினும் அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வேண்டுகோளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலே இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் 55 அமுல்படுத்தப்பட்டன. சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டிலே 16,620 மாணவர்கள் இதன் ஊடாக நன்மையடைந்துள்ளனர்.



சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மொழி சங்கங்களை தொடர்புபடுத்திக் கொண்டு சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிலே 23 அமுல்படுத்தப்பட்டன. அதனூடாக இனங்களுக்கிடையே நட்புறவு, மொழி அறிவு, திறமை மற்றும் மனப்பான்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட மொனராகலை மற்றும் புத்தளை பிரதேச செயலக அலுவலகங்களில் அறிவித்தல் பலகைகள் மும்மொழிகளிலும் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுச் சுற்றுலா, நாத யாத்திரை இசைக் கச்சேரி, அதிமேதகு சனாதிபதி அவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற பட்டம் விடும் விழா,



சமூக ஒருமைப்பாட்டிற்காக பணியாற்றுகின்ற பங்காளர்களை அழைத்து மாநாடு ஒன்றினை நடாத்துதல் உள்ளிட்ட பல நிகழ்ச்சித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக கல்வி, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வினைக் கட்டியெழுப்புதல், சமூக ஒருமைப்பாடு தொடர்பாக அறிவூட்டல் உள்ளிட்ட





பிரிவுகளின் ஊடாக ஒவ்வொரு துறைசார்ந்த இனத்தவர்களையும் வலுவூட்டல் உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பக்கட்டன.

பல்லின, பல்சமய மற்றும் நானாவித சமூக நிலைகளிலுள்ள ஒரு நாடான இந்நாட்டிலே அமைதியாகவும், ஒற்றுமையாகவும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து துரித அபிவிருத்தியினை நோக்கி பயணிக்கும் ஒரு நாடாக மாற்றியமைக்கும் நோக்குடன், மென்மேலும் பல விடயங்களை உள்ளடக்கி எதிர்வரும் ஆண்டிலும் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.தேசிய ஒருமைப்பாட்டிற்கான மாநாடு

நாட்டிலே நிலவிய மோசமான சூழ்நிலை மாறி அபிவிருத்தியினை நோக்கி பயணிக்கின்ற ஒரே இலங்கை தேசத்து மக்களாக வெற்றியினை நோக்கிப் பயணிக்கும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. இந்நிலையினைப் புரிந்துகொண்டு பல்வேறு இனக் குழுக்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான நட்பினை உறுதிப்படுத்தி சமூகத்தின் சகவாழ்வு மற்றும் நிலைத்திருக்கும் தன்மை என்பவற்றிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு தேசிய ஒற்றுமைக்கான கலந்துரையாடலொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.



அதன் பயனாக "தேசிய ஒற்றுமைக்கான மாநாடு" எனும் தலைப்பிலான எண்ணக்கருவின் ஊடாக அண்மைக் காலத்தில் இன மற்றும் சமய குழுக்களிடையே ஏற்பட்ட ஒரு சில மோதல் சம்பவங்கள் காரணமாக ஏற்பட்ட கவலைக்கிடமான நிலைகளிலிந்து

பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஊடாக ஏற்படக் கூடிய மனக் கசப்புக்களை அகற்றி சமூகத்திலே பரந்த அளவிலான மக்கள் கூட்டத்திலே ஒற்றுமைக்கான எதிர்பார்ப்புக்கள் வலுப்பெற வேண்டுமென்பது உணரப்பட்டது.

2014.03.04 ஆம் திகதிய இலக்கம்: அப/13/1668/520/009 உடைய அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் "பல்வகைமைக்குள் ஒற்றுமை பற்றிய மக்கள் பிரகடனம்" பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து 2014.04.07 ஆம் திகதியன்று "தேசிய ஒற்றுமையை நோக்கி" எனும் தொனிப்பொருளில் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றான தேசிய மாநாட்டினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கைச் சமூகத்திலே வாழுகின்ற அனைத்து இனங்கள், இனக் குழுக்கள், சமயங்கள் மற்றும் காலாசாரங்களுக்கு இடையே புரிந்துணர்வினை உறுதி செய்து ஒருவருக்கொருவர் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒற்றுமை என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதே தேசிய ஒற்றுமைக்கான மாநாட்டின் நோக்கமாக அமைந்தது. இதனூடாக சகவாழ்வு மற்றும் நல்லாட்சி என்பவற்றினை ஏற்படுத்தி சமத்துவமிக்க சமூகம் ஒன்றினை கட்டியெழுப்புவதே நோக்கமாக அமைந்தது.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட தேசிய மாநாடு, சமூக ஒருமைப்பாடு பற்றிய தேசியக் கொள்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புதல், இலங்கையின் அபிமானம் மற்றும் தாமும் சமூகத்தின் பங்காளன் என்ற உணர்வு மற்றும் பொறுப்பு, பௌதீக சூழலைப் பாதுகாத்தல், இனம் மற்றும் சமயங்களுக்கிடையே கலாசாரம் பற்றி ஒருவரை ஒருவர் காட்டுகின்ற மதிப்பு, இலங்கையின் பெறுமதி மற்றும் பரஸ்பர தன்மையினை வளர்த்தல், நடத்தை ரீதியான மாற்றங்கள் ஆகிய விடயங்களின் பக்கம் கவனம் செலுத்தப்பட்டது. சிவில் சமூக பொறுப்புக்களை ஏற்பதற்கு உதவுகின்ற முறைபற்றியும் கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம் மக்களிடையே சிறந்த தொடர்பினை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு வசதியளிக்கப்படுவதுடன், தேசிய ஒற்றுமை பற்றிய செய்தியை நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் கொண்டு செல்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

தேசிய மாநாட்டினை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியொன்றும் நடைபெற்றது. இப்போட்டியானது மாகாண மட்டத்திலும் மற்றும் அகில இலங்கை மட்டத்திலும் நடாத்தப்பட்டது. அதில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.







## 3.சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவைகள்

இன பேதமின்றி அனைத்து இலங்கையர்கள் மத்தியிலும் பரஸ்பர நம்பிக்கையினை விருத்தி செய்து சமூகத்தின் வாய்பற்ற குழுக்களுக்கு சமவாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக பிரசை ஒருவராக சமூகத்திலே வாழ்வதற்குத் தேவையான அடிப்படை சட்ட ஆவணங்களைப்

பெற்றுக் கொடுப்பதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரே இடத்தில் இந்த அனைத்துச் சேவைகளையும் மக்களுக்குத் தடையின்றி பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த சேவைகள் அனைத்தும் பொது மக்களுக்கு இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. (உதாரணமாக தேசிய அடையாள அட்டைக்குத் தேவையான புகைப்படங்கள் மற்றும் முத்திரைகள், பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் மற்றும் மரண சான்றிதழ் என்பவற்றிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் புதிய விவாகங்களுடன் தொடர்படைய கட்டணங்கள் என்பனவும் அந்த நபர்களிடம் எதுவிட கட்டமுமின்றி பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.)

இதனூடாக மக்களுக்குக் காலம் மற்றும் சிரமம் என்பன மீதப்படுத்தப்படுவதுடன், பிரசை ஒருவர் என்ற ரீதியில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அடிப்படை ஆவணமான தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதன் மூலம் அவர்கள் சமூகமயப்படுத்தப்படுகின்றனர். இதன் போது பெற்றுக்கொடுக்கப்பட்ட சேவைகள்,

- தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல்.

2014 ஆம் ஆண்டிலே சுமார் 2364 பேருக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

- பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல், காலம் கடந்து பிறப்பினை பதிதல், திருத்தங்கள், அன்னளவான வயதுச் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல்,

2014 ஆம் ஆண்டிற்கு சுமாராக 6229 பேருக்கு மேற்படி ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

- புதிய விவாகங்களை செய்து வைத்தல்

  2014 ஆம் ஆண்டிலே மாத்திரம் விவாகமாகாது ஒன்றாக வாழ்க்கை நடாத்தும் நபர்கள் 413 பேருக்கு இலவசமாக விவாகப் பதிவு செய்து வைக்கப்பட்டது.

- காணாமற்போன அடையாள அட்டைகளுக்காக பொலிஸ் சான்றிதழ்களை வழங்குதல்

காணாமற்போன தேசிய அடையாள அட்டைகளுக்காக பொலிஸ் அறிக்கைகள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

- கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொடுத்தல்
- சமாதான நீதவான் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுத்தல்.

இதனூடாக தேசிய அடையாள அட்டைகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்கள், மரண மற்றும் விவாகச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சத்தியக் கடதாசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- முதியோர் அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுத்தல்.

சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவசமாக புகைப்படங்களைப் பெற்றுக்கொடுத்து முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிலே சுமார் 70 பேர் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவைகள் முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தோட்டப்புற பிரதேசங்கள், பின்தங்கிய பிரதேசங்கள் என்பன உள்ளடக்கப்படும் வகையில் நடாத்தப்பட்டுள்ளன. (முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்கள்)

2013 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் நேர்மைக்கான சம நுழைவு கருத்திட்டத்தின் ஊடாக (UNDP அனுசரணை) நடாத்தப்பட்ட

சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக 12 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இனங்காணப்பட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு முதல் நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.







## 4.சமூக ஒருமைப்பாட்டு இளைஞர் முகாம்

பல்வேறு இனங்களைச் சேர்ந்த இளைஞர்களிடையே சமாதானம், சகவாழ்வு மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட சமூக இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதன் ஊடாக இதய சுத்தியுடன் கூடிய இளம் சமூதாயம் ஒன்றினை உருவாக்குவதே இந்த இளைஞர் முகாமின் நோக்கமாகும்.

இளம் சமுதாயத்தினர் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்கும் மற்றும் சமூகத்திலே மாற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டிலே முன்னணி வகிக்கக் கூடிய குழுவொன்றாக புரிந்து கொண்டு அமைச்சினால் ஒவ்வொரு ஆண்டிலும் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக “சமூக ஒருமைப்பாட்டு” இளைஞர் முகாம் நடாத்தப்படுகின்றது.

ஓர் ஆண்டிலே இவ்வாறான முகாம்கள் 04 வீதம் நடாத்தப்படுவதுடன், ஒரு முகாமிலே சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் 100 – 150 இடைப்பட்டவர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர் முகாமினுள் தலைமைத்துவ மற்றும் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்கேற்பின் மூலம் விரிவுரைகள், சங்கீதமானது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பிரபல ஊடகமாகக் கொண்டு சங்கீதத்தின் ஊடாக சமூக ஒருமைப்பாட்டினை இளைஞர்களின் மத்தியில் கொண்டு செல்லும் பொருட்டு சமூக ஒருமைப்பாட்டினை தொனிப்பொருளாகக் கொண்ட இசை நிகழ்ச்சிகள், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் புதிய வழிமுறைகள் அடங்கிய தொழிற்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று மற்றும் இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பளித்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடங்கும்.





2014 ஆம் ஆண்டினுள் 3 இளைஞர் முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், சுமார் 300 இளைஞர் யுவதிகள் இதில் கலந்துகொண் டுள்ளனர். மொனராகலை, நுவரெலியா மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளன.



இதன் போது வருகின்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அதிகாரசபையானது தொழில் வழிகாட்டல் சேவையின் ஊடாக அவர்களுக்குக் காணப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் அதனூடாக ஏற்படுகின்ற தொழில் வாய்ப்புக்கள் என்பன பற்றிய விளக்கத்தினையும் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5. பெற்றோரை இழந்த மற்றும் ஒரு பொறுப்புதாரர் மாத்திரம் உள்ள பிள்ளைகளுக்கான சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கையின் ஒரு இலக்காக அமைவது கல்விக்கான நுழைவாகும். இந்த உரிமையினைப் பெற்றுக் கொடுப்பதற்காக பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் அல்லது இனத்துவத்தின் காரணமாக அல்லது சமயம் காரணமாக கல்வித் துறையினுள் எதுவித அசாதாரணமும் அல்லது துறைசார் வகையாதலை தடுப்பதற்காக கவனம் செலுத்தப்படுகின்றது.

துறைசார்ந்துள்ள குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்கான நுழைவிற்கு வசதியளிக்கும் பொருட்டு பெற்றோரை இழந்த அல்லது ஒரு பொறுப்புதாரர் மாத்திரம் காணப்படுகின்ற பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று எமது



அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.



2014 ஆம் ஆண்டிலே கிளிநொச்சி, இரத்தினபுரி, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களில் இந்நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 300 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளன.



இதனூடாக குறைந்த சலுகையுடைய மாணவர்களின் கல்விக்கு வசதியளிப்பதன் ஊடாக அவர்களை கல்வியின் பக்கம் கவனம் செலுத்த வைப்பதற்கும், சமூகத்திலே பீதிக்கப்படக் கூடிய குழுக்களின் அறிவு, திறமை, மனப்பான்மை விருத்தி என்பவற்றின் ஊடாக அவர்கள் சமூகமயப்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது.

## 6. பெண்கள் தலைமைத்துவத்தை சமூக ஒருமைப்பாட்டிற்காக வலுவூட்டல்.

பெண்கள் சமூகத்திலே நிறைவேற்றுகின்ற பணியினைப் பலப்படுத்துவதற்காக அவர்களை சமூக ஒருமைப்பாட்டிற்காக வலுவூட்டும் நோக்குடன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் சமூக ஒருமைப்பாட்டிற்காக பெண் தலைவிகளை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வருட காலப் பகுதியினுள் அமுல்படுத்தப்பட்ட நிகழச்சித் திட்டம் ஒன்றான இதன் அடிப்படை

நோக்கமாக அமைவது 30 பெண்களை பெண் தலைவிகளாக சமூக ஒருமைப்பாட்டிற்காக வலுவூட்டுவதாகும். இதற்கான நிதி அனுசரணையானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) கீழுள்ள சட்டத்தை வலுவூட்டல் மற்றும் நேர்மைக்கான சம நுழைவு என்பவற்றின் சமூக ஒருமைப்பாட்டினை வலுவூட்டும் கருத்திட்டத்தினால் (SELAJSI) வழங்கப்படுகின்றது. அமைச்சின் கண்காணிப்பின் கீழுள்ள இந்நிகழ்ச்சித் திட்டத்துடன் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சும் இணைந்து இது மேற்கொள்ளப்பட்டது. எனும் Search For Common Ground (SFCG) அரச சார்பற்ற அமைப்பினால் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்காக மொனராகலை மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் 15 பெண்கள் வீதம் 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.





அவர்களுக்கு தலைமைத்துவம், சமூக ஒருமைப்பாடு, தொடர்பாடல், ஆண் பெண் சமூகத்தன்மை, மற்றும் துணை வலிமை என்ற அடிப்படையில் 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இந்த பயிற்சி செயலமர்வின் ஊடாக பெற்றுக் கொண்ட அறிவினை செயற்படுத்துவதற்காக இந்த பெண்களுக்கு தமது இரு மாவட்டங் களிலும் சமூக ஒருமைப்பாடு, மொழி மற்றும் ஒற்றுமை என்பவற்றுட் தொடர்புடைய 03 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. நிவாரண சுற்றுப் பயணம் மற்றும் மாவட்ட கூட்டங்களை நடாத்துதல் என்பவற்றின் ஊடாக இந்நிகழ்ச்சித் திட்டத்தை செயல் முறையில் அமுல்படுத்துவது இலகுவாக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது 2013 ஆண்டின் இறுதி காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆண்டு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டது.

## 7. கலாசார மற்றும் சமய விழாக்கள்

பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாடான இலங்கையினுள் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த இனங்களுக்கு ஏற்ப அவர்களது சமயம், கலாசாரம் என்பன ஒன்றையொன்று வேறுபட்டு காணப்படுகின்றது. தைப்பொங்கல் விழா, சிங்கள தமிழ் புத்தாண்டு விழா, ஹஜ் விழா, தீபாவளி,



சரஸ்வதி பூஜை, நத்தார் உற்சவம் என்பன அவ்வாறான கலாசார விழாக்களாகும்.





இவ்வாறான ஒன்றுக்கொன்று வித்தியாசமான சமய மற்றும் கலாசார விழாக்களை கொண்டாடும் நிகழ்வானது எமது அமைச்சினால் வருடா வருடம்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரே சமூகத்தினுள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சமய மற்றும் கலாசார பெறுமதிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு இச்சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அதனூடாக இலங்கைச் சமூகத்தினுள் வாழுகின்ற ஒவ்வொரு இனத்தவர்களிடையேயும் பரஸ்பர நம்பிக்கை, புரிந்துகொள்ளல் மற்றும் பரஸ்பர கௌரமளித்தல், வரவேற்பு என்பன உறுதிப்படுத்தப்படுகின்றது.



இன பேதமின்றி அனைத்து இனத்தவர்களும் இந்த விழாக்களில் கலந்துகொள்கின்றனர். 2014 ஆம் ஆண்டிலே எமது அமைச்சினால் இவ்வாறான விழாக்கள் நாடு முழுவதிலும் நடாத்தப்பட்டன. யாழ்ப்பாணம், இரத்தினபுரி, மாத்தளை, புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் அவ்விழாக்கள் நடாத்தப்பட்டன.

## 8.வெளி நிறுவனங்கள் அமுல்படுத்துகின்ற சமூக ஒருமைப்பாட்டுக்கான நிதி அனுசரணை வழங்குதல்.

சமூக ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமூக ஒருமைப்பாட்டுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளல் அல்லது நிதி பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் என்பன எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலே நிதிசார் அனுசரணை பெற்றுக்கொடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு.

- மக்களிடையே கலாசார நல்லிணக்கம் மற்றும் உயர் விருப்பத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை கிட்டார் வாசிப்பாளர் சங்கத்தினால் வழங்கப்பட்ட "கிட்டார் வாசிப்பு கச்சேரி"
- நுண்கலை ஊடகங்களின் மூலம் நிலையான இணக்கப்பாட்டிற்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக ஹோமாகமை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தினால் வழங்கப்பட்ட "மிஹிசர பிரசங்கய 3" மற்றும் திரிகோணி சலாசார மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "டவல பீஷன பிரசங்கய"
- மக்கள் குழுக்களிடையே பரஸ்பர நம்பிக்கை, கௌரவம், வரவேற்பினை ஏற்படுத்தல் மற்றும் பல்வேறு சலாசாரங்களை இனங்காணுவதற்கான சந்தர்ப்பமாக 07 புத்தாண்டு விழாக்களுக்கு நிதி அனுசரணை பெற்றுக்கொடுக்கப்பட்டது. அவையாவன.
- "சிகித்தி புத்தாண்டு விழா". எம்பிலிப்பிட்டிய,
- "சுரல் நத". இம்புல்பே,
- சமூக ஒருமைப்பாட்டு பக்மஹ செனகெலிய". எஹலியகொட பிரதேசச் செயலக பிரிவுகள் இரண்டில் நடாத்தப்பட்டன.
- "சகோதரத்வயே பக்மஹ செனகெலிய". குருவிட்ட,
- வட மாகாணத்தின் தமிழ் கலாசாரம் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கலாசார பரிமாற்றத்தின் ஊடாக இனங்களுக்கு இடையே நட்புறவைக் கட்டியெழுப்புவதற்காக கமநல உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "நாம் பயிரிடுவோம் இனங்களுக்கு இடையே சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவோம் இலங்கை நாட்டு மக்கள்" நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அ/நிக்கவெவ அநுர மகா வித்தியாலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "மும்மொழி அபிவிருத்தி மற்றும் கலாசார பரிமாற்று நிகழ்ச்சித் திட்டம்."
- "பல்வகைமையின் ஒன்றிணைவானது பலமிக்க மும்மொழியில் இதய சுத்தியுடன்

அனைத்து மக்கள் கலாசார அடையாளங்களைப் பாதுகாக்கின்ற ஒற்றுமைமிக்க இலங்கை மக்களை கட்டியெழுப்புவோம்'' என்ற அமைச்சரின் செய்தியுடன் இலங்கைக் குடியரசு சுகாதார ஊழியர்களின் 60 ஆவது ஆண்டு பூர்த்தி ஞாபகார்த்த வெளியீட்டில் அமைச்சிற்காக ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டது.

- சமய பக்தியை ஏற்படுத்தல், சகவாழ்வின் முக்கியத்துவம், நட்புறவு, ஒற்றுமையை ஏற்படுத்தல் என்பவற்றிற்காக எஹலியகொட பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''அசிரிமத் புது தெமகுல'' கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம்.
- தேசிய மற்றும் சமய ஒற்றுமைக்கான சிறுவர் மன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ''சாமயே கீத்தய'' மற்றும் சமூக ஒருமைப்பாட்டு ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட ''சங்கலன கீ'' நிகழ்ச்சித்திட்டம்.

மேலும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடுகளின் மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றில்,

- ''சிறுவர்கள் மற்றும் பெண்கள் விரும்பக் கூடிய நாளைய தினம்'' எனும் தொனிப் பொருளின் கீழ் சிறுவர்கள் மற்றும் பெண்களை விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம்.
- மகளிர் தினத்தை முன்னிட்டு ''தொழில் புரியும் பெண்களின் நாளாந்த வாழ்க்கை மற்றும் மன அழுத்தம்'' விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம்.
- ''பௌத்த கண்ணோட்டத்தின் பிரகாரம் பெண்கள்'' மற்றும் ''ஆண் பெண் சமத்துவத்திற்கு மதிப்பளிப்போம்'' உள்ளிட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.
- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ரத்மலானை கண் பார்வையற்றோர் கல்லூரியில் ''அன்பு காட்டி எம்மை பராமரியுங்கள்'' நிகழ்ச்சித் திட்டம்.
- பெண் பிள்ளையின் சர்வதேச தினத்தை முன்னிட்டு ''மகளே நீ தான் எமது எதிர்காலம்'' நிகழ்ச்சித்திட்டம் மஹரகமை சுச்சரித்த சிறுவர் இல்லத்தில் நடாத்தப்பட்டது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைச்சினால் ரூ. 242,111.60 பெறுமதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 03.3 நிர்வாகப் பிரிவு

அறிமுகம்

அமைச்சின் அலுவலக நிர்வாகம், மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் என்பன நிர்வாகப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாகும். அமைச்சின் உத்தியோகத்தர் குழாமிற்கு புதிய பதவி நிலைகளை ஏற்படுத்தும் அடிப்படையில் நீதி அலுவலர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, உள்ளககணக்காய்வாளர் பதவி தரம் உயர்த்தப்பட்டமை இவ்வருடத்தினுள் இடம் பெற்றுள்ளன. மாகாண காரியாலயங்கள் 8 தொடர்பாக அமைச்சின் கீழ் 64 பதவி நிலைகளும், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் சார்பாக 20 பதவிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக அமைச்சினால் அலுவலக உதவியாளர் பதவி 3ம், சாரதி பதவி 1ம் மொழி அழைப்பு ஒருங்கிணைப்பாளர் பதவி மூன்றிற்கான ஆட்சேர்ப்பும் இடம் பெற்றுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான 205 அலுவலர்களின் ஆட்சேர்ப்பானது தொடர்புடைய ஆட்சேரப்பு ஒழுங்குமுறைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நவம்பர் மாதத்தினுள் நியமனம் வழங்கவும் சேவை ஆரம்பபயிற்சி மற்றும், மொழிப் பயிற்சிவழங்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு மாகாண காரியாலயங்களுக்கான உதவிப்பணிப்பாளர்கள் பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதோடு அபிவிருத்தி உதவியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அலுவலக உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளது.

அமைச்சின் மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கான மொழிக்கற்கை பயிற்சி மற்றும் அடையாளம் காணப்பட்ட பயிற்சி தேவைகளுக்கு ஏற்ப அலுவலர்களுக்கு தேவையான பயிற்சி வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ மீளமைப்பின் கீழான கருமங்கள் மற்றும் வேலைநடைமுறை மீளாய்வு அறிகையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் இடம்பெறுவதோடு, அவற்றுள் சில நடைமுறைப்படுத்தப்பட்டு முடிவடைந்துள்ளன.

அமைச்சின் இணையதளத்தை இற்றைப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு அவர்களினால் இற்றைப்படுத்தப்பட்டது. அமைச்சுக்கான புதிய மின்னஞ்சல் தயாரிக்கும் பணி இடம்பெற்று வருகிறது. மொழி அழைப்பு நிலையத்திற்கு வரும் அழைப்புகளை ஒலிப்பதிவு செய்யும் வசதி மற்றும் தரவு தளம் ஒன்றுடன் மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குலியாப்பிட்டியவில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடத்திற்கான கண்பாட்சி கூடம் மற்றும் அதன் அனைத்து ஒருங்கிணைப்பு பணிகள், தேசிய சமானதான மாநாட்டு நடவடிக்கைகளின் முகாமைத்துவ பணிகள் மற்றும் மாநாட்டு அலுவலகம் பற்றிய பணிகள், சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்கு சமாந்திரமாக மேற்கொள்ளப்பட்ட வடக்கு மற்றும் சபரகமுவ மாகாண நிலையங்கள் தாபிப்பு மற்றும் திறப்பது தொடர்பான பணிகள், சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்கான பட்டம் விடும் நடவடிக்கை, அமைச்சின் அழைப்பு நிலையத்திற்கு Sip Trunk வசதியை பெற்றுக் கொடுத்தல் செயற்பாடு, கௌரவ பிரதி அமைச்சரின் அலுவலகத்தை தாபித்தல் தொடர்பான நடவடிக்கைகள், ஊடக பிரிவுக்கு புதிய வீடியோ கமரா ஒன்றை கொள்வனவு செய்தல் ஆகியன 2014 டிசம்பர் மாதம் ஆகின்ற போது பெறுகை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும். மேலும் மொழிச் பிரிவின் நடவடிக்கைகளுக்காக தகவல் முகாமைத்துவ கணினி முறைமை தயாரித்தல் மற்றும் SELAJSI கருத்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வரும் விடயங்களாகும்.

## 03.4 திட்டமிடல் பிரிவு

அறிமுகம்

திட்டமிடல் பிரிவானது, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். பெற்றுக் கொள்ளப்படும் பெறுபேறுகள், வினைத்திறன், விளைத்திறன் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்படும். மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைக்கப்படும்.

**பிரதான பணிகள்**

- கூட்டுத்திட்டம், செயற்பாட்டுத்திட்டங்கள், வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுத் திணைக்களம் போன்ற நீண்டகால/ குறுங்கால திட்டங்களை தயரிக்க அமைச்சின் பல்வேறு பிரிவுகளானது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்.
- அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட முன்னோக்கு கருத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்.
- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அதனை அமைச்சின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம், வெளிநாட்டு உதவி மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் ஏனைய அக்கறைகொண்ட பிரிவினர்களுக்கு சமர்பித்தலும்.
- முன்னேற்றம் மற்றும் செயற்பாட்டு திட்ட அற்க்கையை அமைத்து வரவு செலவு தொடர்பான கலந்துரையாடலில் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.
- பிரிவின் தரவுகளை பராமறித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

வருடாந்த செயற்பாட்டு அறிக்கையை ஒழுங்கமைத்து பாராளுமன்றத்திற்கும், நிதி அமைச்சுக்கும் கணக்காளருக்கும் சமர்ப்பித்தல்.

## 03.5 நிதிப் பிரிவு

அறிமுகம்

நிதி சேவைகள் ஒருங்கிணைப்புச் செய்தல், ஏற்புடைய பிரிவுகளை ஒருங்கிணைப்பதனூடாக நிரூபிக்கத்தக்க நிதி தகவல்களை மற்றும் அமைச்சின் முகாமைத்துவ முறைமையை பராமரித்தல்.

**பிரதான பணிகள்**

- பிரதம கணக்காளர் என்ற வகையில் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சின் நிதிக் கடப்பாடுகளை பூர்த்தி செய்யவும் பாராளுமன்றத்திற்கு வகைப்பொறுப்புக்கூறவும் உதவுதல்;
- அரசாங்கத்தின் நிதி விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி செயற்படுதலை உறுதி செய்தல்.
- நிதி முகாமைத்துவம் உட்பட சிறந்த நிதி கணக்கீட்டு முறைமையை தாபித்தலும் பராமரித்தலும்.
- திறைசேரி, அமைச்சுக்கு கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுடன் ஒருங்கிணைந்து நிதி அறிக்கைகள் மற்றும் வரவு செலவு தேவைகளை தயாரித்தல்/இற்றைப்படுத்தல்/மீள்பார்வை செய்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.
- நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவை தயாரித்தல்.
- உரிய நேரத்திற்கு மற்றும் துல்லியமான நிதி அறிக்கையிடலை உறுதிப்படுத்தல்.

அமைச்சின் சொத்துக்களை முகாமை செய்தல்.

## 03.6 உள்ளக கணக்காய்வு பிரிவு

அறிமுகம்

அமைச்சில் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் அணைத்து தளத்திலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் பணிகளை மீளாய்தல், அளவிடுதல், மதிப்பிடுதல், மற்றும் உள்ளக நிர்வாக முறையில் விடய பங்களிப்பு தொடர்பாக அறிக்கை இடுவதன் மூலம் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.

உள்ளக கணக்காய்வை பலப்படுத்த இதுவரை காணப்பட்ட உள்ளக கணக்காய்வு (இ.க.சே.III) வது வகுப்பு பதவிக்கு ((இ.க.சே.I) வது வகுப்பு பதவியாக மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்**

- பிழைகள் மற்றும் மோசடிகள் தடுப்பதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அமுலாக்கப்படும் உள்ளக நிர்வாக முறைமையின் வெற்றிக்கான தன்மையை மதிப்பிடலும் உள்ளக நிர்வாகத்தை பலப்படுத்த உதவுதல்.
- கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை நிர்ணயித்தல் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு முறைகளினால் சரியான நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை பரிசீலனை செய்தல்.
- நிறுவனத்தின் பதவியணியினருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கின்ற நிறுவனங்களின் சொத்துக்களை எல்லா வகையான பாதிப்புகளில் இருந்தும் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்படுகிறது என்பதை தேடிப்பார்த்தல்.
- தாபனக் கோவை, நிதிக்கோவை, பொது நிர்வாகம், திறைச்சேரி மற்றும் வேறு சுற்றறிக்கை மற்றும் நெறிப்படுத்துகை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை கண்காணித்தல்.

# 04.அரச கரும மொழிகள் திணைக்களம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

## 04.அரசகரும மொழிகள் திணைக்களம்

### அறிமுகம்

1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக 1956.10.01ஆம் திகதியன்று அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

1987 – 13ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் 1988 – 16ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் அமைவாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டதோடு, ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டது. அரசியலமைப்பின் IVஆம் அத்தியாயத்தின் 18ஆம் மற்றும் 19ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொழிக் கொள்கையை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனமாக தற்போது அரசகரும மொழிகள் திணைக்களம் செயற்படுவதோடு, அதற்கமைய மேற்குறித்த மூன்று மொழிகளுக்குமுரிய மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்கல், அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழித்தேர்ச்சியை விருத்தி செய்தல், கலைச்சொற்றொகுதிகளை தயாரித்தல், மொழி தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் அகராதிகளை தொகுத்தல் முதலான பணிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

’பாஷா மந்திரய’’, இலக்கம் 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ள இத் திணைக்களத்தின் பிரதான பதவியை அரசகரும மொழிகள் ஆணையாளர் வகிக்கிறார்.

### நோக்கு

சகவாழ்வுடன் கூடிய சமாதானமான மும்மொழிச் சமூகம்.

### செயற்பணி

இன ஒற்றுமை மற்றும் சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கலும் ஒருங்கிணைத்தலும்.

### திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள்

1. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2007 மற்றும் 07/2007 பிரகாரம் அரசகரும மொழித்தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்கான எழுத்து மூல மற்றும் வாய்மூல பரீட்சைகளை நடாத்தலும் சான்றிதழ்களை வழங்கலும்.
2. அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகளை நிறைவேற்றல் (சிங்களம் /தமிழ்/ ஆங்கிலம்)

3. பல்வேறு துறைகளுக்குரிய கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல் (சிங்களம் /தமிழ்/ ஆங்கிலம்)

4. அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கான பாடப்புத்தகங்களையும் வழிகாட்டல் நூல்களையும் தொகுத்தலும் விற்பனை செய்தலும்.

5. மும்மொழி அகராதிகளை தொகுத்தல்.

6. நவீன தொழிநுட்ப முறைகளை பயன்படுத்தி சிங்களம் , தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் போன்றே சர்வதேச ரீதியான மொழிகளை கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்தலும்.

7. வெளி நிறுவனங்களின் பணிக் குழுவினருக்கு மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளையும் நடாத்தல்.

8. பல்கலைக்கழகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட வேறு கல்வி நிறுவனங்களிலும் மொழிபெயர்ப்பு பாடநெறிகளை பயில்வோருக்கு செயன்முறைப் பயிற்சியை வழங்கல் மேற்குறித்த அனைத்து பணிகளையும் நிறைவேற்றதுவதன் பொருட்டு திணைக்களத்தில் அபிவிருத்தி, பரீட்சை, மொழிபெயர்ப்பு, மொழிஆய்வுகூடம், வெளியீடுகள் மற்றும் விற்பனை, கலைச்சொற்றொகுதி தொகுப்பு, ஆராய்ச்சி, நூலகம் ஆகிய பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

**2013ம் செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பொருளாதார முன்னேற்றம்**




| தொ /இல | செயற்பாடு | உத்தேசிக்கப்பட்ட தொகை | உண்மைச் செலவு | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கு உதவும் நூல்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் அச்சிடுதல். மொழித்தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துதல் | 23,000,000.00 | 10,341,226.90 | 44.96% |
| 02 | அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களுக்கு மொழி பெயர்ப்புச் சேவைகளை வழங்கல் மற்றும் கலைச் சொற்றொகுதிகளை தொகுத்தல் | 2,350,000.00 | 2,175,210.00 | 92.56% |
| 03 | தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான மொழிகளை மேம்படுத்தல் | 1,900,000.00 | 1,031,344.00 | 54.28% |
| 04 | மனிதவள அபிவிருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்தி | 1,000,000.00 | 1,000,000.00 | 100% |
| 05 | தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 1,500,000.00 | 411,305.00 | 27.42% |
| | **மொத்தம்** | 29,750,000.00 | 14,959,085.90 | 49.07% |

## 2014ஆம் வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட பணிகளும் அதன் முன்னேற்றமும்

### 1.மொழித்தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துதல்

அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சியை மதிப்பிடுதலையும் மும்மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்காக ஊக்கப்படுத்துதலையும் குறிக்கோளாகக் கொண்டு பரீட்சைகளை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல், சான்றிதழ்கள் வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

மொழித் தேர்ச்சி வாய்மூல (மீள்) பரீட்சையானது ஊவா மாகாணத்தில் 146 பரீட்சார்த்திகளின் பங்குபற்றுதலுடன் 2014.01.11ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு அதற்கு சமாந்தரமான மேல் மாகாண பரீட்சையானது 2014.02.10,11 மற்றும் 12 ஆம் திகதிகளில் 358 பரீட்சார்த்திகளின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது.

2013.09.29 ஆம் திகதி நடாத்தப்பட்ட எழுத்து மூல பரீட்சைக்குரிய IIIஆம் மட்ட வாய்மூல பரீட்சையானது 2014.07.19 மற்றும் 20 ஆகிய தினங்களில் சப்ரகமுவ மாகாணத்தின் 1198 பரீட்சார்த்திகளுக்கும் 2014.07.18, 19 மற்றும் 20ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணத்தின் 1675 பரீட்சார்த்திகளுக்கும் 2014.07.26 மற்றும் 27 ஆகிய தினங்களில் மத்திய மாகாணத்தின் 2588 பரீட்சார்த்திகளுக்கும் வாய்மூல நடாத்தப்பட்டது.

2014 அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூல பரீட்சைகள் மாகாண மட்டத்தில் நடாத்துவதை அடிப்படையாகக்கொண்டு வடமேல் மாகாணத்தின் 2549 பரீட்சார்த்திகளுக்கு 2014.11.15/16/22/23 மற்றும் 29ஆகிய நாட்களிலும் தென் மாகாணத்தின் 3821 பரீட்சார்த்திகளுக்கு 2014.11.15/16/22/23/29 மற்றும் 30 ஆகிய நாட்களிலும் பரீட்சை நடாத்தப்பட்டது. 2014.11.24/25/26 ஆகிய நாட்களில் ஊவா மாகாணத்தின் 2440 பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நடாத்தப்பட்டது.

அதன்படி 2014 வருடத்தினுள் அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்து மூல பரீட்சையிலும் க.பொ.த (சா.த) பரீட்சையின் இரண்டாம் மொழியிலும் சித்திபெற்ற 6007 உத்தியோகத்தர்களுக்கான வாய்மூல பரீட்சை மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது.

அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்ற உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்களை வழங்குதலானது பரீட்சை பிரிவுக்குரிய இன்னொமொரு பணியாகும். 1222 ஊவா மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் 2014.01.11 ஆம் திகதி வழங்கப்பட்டதோடு அமைச்சரின் தலைமையில் 2014.10.25 ஆம் திகதி எஹெலியகொட பிரதேச செயலகத்தில் 70 உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 603 சான்றிதழ்கள் தபால் மூலம் உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.



பரீட்சை பிரிவின் ஓர் பணியாக வெளி நிறுவனங்களுக்கான பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. அதன்படி ரன்டெம்பே தேசிய மாணவர் படையணி தலைமயகத்தின் 74 உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் அடிப்படை தமிழ் மொழி பரீட்சை 2014.01.20 ஆம் திகதியும் கொத்மலை தேசிய மாணவர் படையணி தலைமகத்தின் 107 உத்தியோகத்தர்களுக்கான உயர் தமிழ் பரீட்சை 2014.03.07 ஆம் திகதியும் நடாத்தப்பட்டன. அநுராதபுர மாவட்ட வணிக சபையின் 74 உத்தியோகத்தர்களுக்கான தமிழ் விசேட எழுத்து மூல/வாய் மூல பரீட்சை 2014.04.29 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதே போன்று அரச மொழிகள் ஆணைக்குழுவிற்கான பிரதான முகாமைத்துவ உதவியாளரை நியமிக்கும் போட்டிப் பரீட்சை 2014.07.05 ஆம் திகதி 27 பரீட்சார்த்திகளுக்கு நடாத்தப்பட்டது.

மொழி பெயர்ப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2014.10.25,26 ஆகிய திகதிகளில் 09 உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. மொழித் தேர்ச்சி பரீட்சையை நடாத்துவதற்கு 2014ஆம் வருடத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகையானது ரூபா. 5419783.30 ஆகும்.

**2.மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கு உதவும் நூல்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் அச்சிடுதல்.**

07/2007ஆம் அரச நிர்வாக சுற்று நிருப இலக்கத்திற்கு உட்படும் தொழில் புரிவோருக்கும் அரசகரும மொழித் தேர்ச்சியை கற்பதற்கு விருப்பமுள்ள அனைவருக்கும் எழுத்து ஊடகமாக பயன்படுத்தக்கூடிய முறையில் பாடநூல்களையும் ஏனைய துணை நூல்களையும் தயாரித்தல் மற்றம் விற்பனை செய்தலானது வெளியீடுகள் மற்றும் விற்பனை பிரிவின் முக்கிய பணியாகும். அதன்படி 2014 ஆம் ஆண்டில் பேச்சுத் தமிழ் புத்தகங்களின் 5000 பிரதிகளும்,எழுத்து தமிழ் புத்தகங்களின் 3500 பிரதிகளும், நாங்கள் சிங்கள,தமிழ்,ஆங்கிலம் கற்போம் புத்தகங்களின் 50000 பிரதிகளும் மும்மொழி சஞ்சிகையின் 1000 பிரதிகளும் அச்சிடப்பட்டன. இதன் பொருட்டு 2014ஆம் வருடத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகையானது ரூபா. 5191443.60 ஆகும்.

**3.அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களுக்கு மொழி பெயர்ப்புச் சேவைகளை வழங்கல்**

அங்கீகரிக்கப்பட்ட முறைகளுக்கு அமைவாக தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தரம்மிக்க மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதலானது மொழி பெயர்ப்பு பிரிவின் பணியாகும். அதன்படி தேசிய மொழிகள் திட்டத்தின் நிதி உதவியோடு திணைக்களத்தின் மூன்றாம் மாடியில் தாபிக்கப்பட்ட நவீன வசதிகளுடனான மொழி பெயர்ப்பு நிலையமானது ஜனாதிபதி

செயலாளரினதும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரினதும் தலைமையில் 2014.01.03 ஆம் திகதி திறந்து





வைக்கப்பட்டது. மேலும் இவ் வருடத்தில் ஜுன் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை மாதமொன்றிற்கு 05 நாட்கள் வீதம் மொழி பெயர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் மொழி பெயர்ப்புக்களை மேற்கொள்வதன் கீழ் அந்நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 723 ஆவணங்களில் 3035 பக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**4. கலைச் சொற்றொகுதிகளை தொகுத்தல்**

நிபுணர்கள், உயர்தொழில் செய்வோர்கள், மாணவர்கள் மற்றும் எழுத்தாளர்கள், பொதுவில் அனைத்து மக்களினதும் அறிவை மேம்படுத்துவதற்கு துணை புரியும் வகையில் சட்டம், கல்வி, கட்டிட நிர்மானம், தகவல் தொழில்நுட்பம், உளவியல், புள்ளிவிபரவியல், விவசாயம், வரலாறு, மொழியியல், தாவரவியல், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகிய 20 கலைச் சொற்றொகுதிகள் 2014ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதன் போது புதிய கலைச்சொற்தொகுதிகளை தாயரித்தலுடன் தற்போதுள்ள இரு மொழி கலைச்சொற்றொகுதிகளை கொண்டு மும்மொழி கலைச்சொற்தொகுதிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம்- சிங்களம் கலைச்சொற்றொகுதி தயாரித்தலின் கீழ் 12 பாட துறைகளுக்கு மும் மொழி

கலைச்சொற்றொகுதி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இணையதளத்தில் அவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஏனைய பாட துறைகளில் தயாரிப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆங்கிலம் - தமிழ் கலைச்சொற்றொகுதி தயாரித்தலின் கீழ் கல்வி, கட்டிட நிர்மானம், மொழியியல், மற்றும் வரலாறு ஆகிய பாட துறைகளில் மும்மொழி கலைச்சொற்றொகுதி தாயரிக்கப்பட்டுள்ளன. சட்டம், தகவல் தொழில்நுட்பம், உளவியல், புள்ளிவிபரவில், விவசாயம், தாவரவில், கணிதம், பௌதீகவியல், ஆகிய பாட துறைகளில் கலைச்சொற்றொகுதிகளில் 85% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பாடத் துறைகளில் 3500 ற்கும் அதிகமான சொற்கள் சேர்க்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டு முடிந்துள்ளது.

### 5.தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான மொழிகளை மேம்படுத்தல்

தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான மொழிகளை கற்பதற்கு விருப்பமுடைய நபர்களுக்கான நவீன தொழிநுட்பத்துடன் கூடிய மொழி ஆய்வுகூடத்தில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பாடநெறிகள் அரை ஆண்டு ரீதியில் நடைபெறுகின்றன. அதன்படி 2014ஆம் வருடத்தில் 17 பாடநெறிகளின் கீழ் 1664 மாணவர்கள் மொழிக் கல்வியை பெற்றுள்ளனர். அப்பாடநெறிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிவடைந்ததோடு அதற்கான மொத்த செலவானது ரூபா.1031344.00 ஆகும். முதல் அரை ஆண்டில் மொழிப் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 599 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமானது 2014.12.02ஆம் திகதி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றது. இப் பாடநெறிகள் மூலம் வருடத்தில் அரசாங்கத்திற்கு ஈட்டப்பட்ட வருமானது ரூபா.11824500.00 ஆகும்.

தொலைக் கல்வி முறையை E-Learning பயன்படுத்தி இரு மொழி அறிவை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை (1ஆம் மட்டத்திற்கு) நடைமுறைபடுத்துவதற்காக Mobitel நிறுவனத்துடன் உடன்படுவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 04 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு விடயம் தொடர்பான 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 6.மொழி பயன்பாடு தொழிநுட்பம், அங்கீகரித்தல் பற்றிய ஆராய்ச்சி நடாத்தல், பரிந்துரைகளை சமர்ப்பித்தல்,கருவிகளை தயாரித்தல்

மிகச் சரியான வர்த்தக பெயர்கள் பயன்பாட்டிற்கு வரல் மற்றும் சமூகமயமாதல் என்பவற்றை குறிக்கோளாக் கொண்டு சிங்களம்,தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள சகல வர்த்தக பெயர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து, அதற்கான பொருள்மிக்க சிங்கள மற்றும் தமிழ்ச் சொற்களை தயாரித்தலானது திணைக்களத்தின் ஆராய்ச்சி பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. 25 அரச நிறுவனங்களினால் 112 பதங்கள் இப்பிரிவிற்கு சமர்பிக்கப்பட்டிருந்ததோடு அதில் 12 நிறுவனங்களின் 47 சிங்கள பதங்கள் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டன. 05 நிபுணர் குழுவின் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு அதில் பங்குபற்றும் வளவாளர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதியை கோரும் கடிதங்கள் வேதனங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 7.அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி தொடர்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.

மேற் குறிப்பிட்ட சபையின் 8.2 (அ) ஆம் இலக்க பரிந் துரைக்கமைய அரச





உத்தியோகத்தர்கள் இலகுவாக பயன்படுத்தக்

கூடிய பாடநூல்கள் 04 வீதம் சரளமான மொழியுடன் கூடிய சிங்கள மற்றும் தமிழ் மொழியில் தயாரித்தலானது திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பணியாகும். அதன்படி I,II,III,IV மட்டங்களின் கீழான பாடங்களை எழுதுதலானது 60% வரை நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் பொருட்டு செலவிடப்பட்ட மொத்த செலவானது ரூபா..27,00,000/- ஆகும்.

**8.மனிதவள அபிவிருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்தி**

செயற்திறனான பொதுமக்கள் சேவைகளை வழங்குவதற்கான விடயம் சம்பந்தமான அறிவுடைய பணிக்குழுவினரை நிறுவனத்தில் தாபித்தலை குறிக்கோளாகக் கொண்டு விடயம் சார்ந்த பயிற்சி, மனப்பான்மை விருத்தி, விளைத்திறன், தகவல் தொழிநுட்பம் மற்றும் மொழி பயிற்சி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) ஆகிய தலைப்புக்களின் கீழ் 10 பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 115 உத்தியோகத்தர்கள் நிறுவன பிரிவின் மூலம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. திணைக்களத்தின் பணிற்றொகுதியின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2014.12.29ஆம் திகதி நடாத்தப்பட்டது. மேலும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் மூலம் மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர் பதவிக்கு 2014.07.23 ஆம் திகதி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

திணைக்களத்தின் அனைத்து நிதி செயற்பாடுகளையும் பெறுகை நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல் கணக்கு பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகளாகும். திணைக்களத்திற்கு ஒதுக்கப்படும் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கீழ் பொது நிர்வாகத்திற்குரிய சம்பளத்தை செலுத்துதல் முதலான செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளை செலவு செய்தலும் திணைக்களத்தின் மூலதன கருத்திட்டங்களுக்குரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. சிறந்த நிதி கட்டுப்பாட்டுடன் மேற் குறித்த பணிகளை நிறைவேற்றுதலும் அது தொடர்பான திறைசேரிக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் அறிக்கையிடலும் முன்னேற்றத்தை சமர்ப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று வருடாந்த பொருட்கள் ஆய்வு நடவடிக்கைகளும் வருடத்தில் நிறைவேற்றப்பட்டன. திணைக்களத்தின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை பேணல் மற்றும் முன்னேற்றத்தை மாதாந்தம், மூன்று மாதங்கள், அரையாண்டு, வருடாந்தம் என்ற ரீதியில் அமைச்சுக்கும் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் அறிக்கையிடலானது அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று ஏனைய சமாந்தர அமைச்சுக்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தும் மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டம், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு திட்டத்தின் கீழ் முன்னேற்றத்தை அறிக்கையிடலும் பாராளுமன்ற ஆலோசகர் குழுவிற்குரிய அறிகையிடல்களும் குறித்த காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன.






திணைக்களத்தினால் பேணப்படும் உயர் தரத்திலான நூலகத்தின் ஊடாக பிரவுன் முறையின் கீழ் திணைக்கள வாசகர்களுக்கான புத்தகங்களை வழங்குதல், நூலக அறிவித்தற் பலகை நிகழ்ச்சித்



திட்டத்தை தொடர்ந்தும் பேணல், சிறப்பம்சங்களுடனான ஆவணத் திரட்டொன்றை பேணல், பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் மொழி ஆவணத் திரட்டொன்றை பேணல், திணைக்களம் தொடர்பான பத்திரிகை ஆவணங்களை சேகரித்தல், நூலக பெயர்ப்பட்டியலை கணனிமயப்படுத்தல், முதலானவை இவ் வருடத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றன. அதே போன்று நூலகத்தில் இருந்த பழைய இராக்கைகளுக்கு பதிலாக புதிய இராக்கைகள் பயன்படுத்தி முறையான நவீன வடிவத்தை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

### 9.விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் சந்தர்ப்பங்களும்

#### தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2014 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய அபிவிருத்தி செயற்பாட்டிற்கு பங்களிப்பதை குறிக்கோளாகக் கொண்டு 6 நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தினால் நடைமுறைபடுத்தப்பட்டன. அதன் கீழ் பிரதான நிகழ்ச்சித்திட்டங்களாக கண்காட்சி மூலம் உள்ளடங்கப்பட்ட மூன்று மாவட்டங்களின் மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்திபெற்ற 736 அரச உத்தியோகத்தர்களுக்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களின் தலைமையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதே போன்று திணைக்கள வெளியீடுகள் விற்பனை நிலையம் ஊடாக 1248 வெளியீடுகள் விற்பனை செய்யப்பட்டதோடு அதில் அரசுக்கு ஈட்டிய வருமானம் ரூ.2,24,475.00 ஆகும்.

கண்காட்சி பூமியில் ‘‘நாங்கள் சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்போம்’’ புத்தகங்களின் 18000 பிரதிகள் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. அதே போன்று இடம்பெற்ற கணனி சார்ந்த மொழி விளையாட்டுகளுக்கு திணைக்கள கண்காட்சி கூடத்திற்கு வந்தவர்களில் 80% க்கு அதிகமானோர் பங்குபற்றியதோடு 2014.02.24ஆம் திககியிலிருந்து கண்காட்சி நடைபெற்ற ஒவ்வொரு நாட்களிலும் காலையும் மாலையும் 2 காட்சிகள் ‘‘சமூக ஒருமைப்பாடு’’ என்பதை தொனிப் பொருளாகக் கொண்ட 2 நாடகங்கள் திணைக்கள பணிற்றொகுதியினரால் முன்வைக்கப்பட்டன.

அதே போன்று அமைச்சின் கூடம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கு சிங்களம்,தமிழ்,முஸ்லிம் ஆகிய இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று உத்தியோகத்தர்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டனர். திணைக்கள கண்காட்சி கூடத்திற்கான மொத்த செலவானது ரூ.4,11,305.66 ஆகும்.

மொழி பயன்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களின் கீழ் ‘பஹன்தொர கலந்துரையாடல் நிகழ்ச்சி’ எனும் பெயரில் உரைகளின் தொகுதியொன்று மாதாந்தம் திணைக்கள பணிக்குழுவினருக்கு முன்வைக்கப்பட்டது.

# 05. அரச கரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

## 05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு

### அறிமுகம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 1991ம் ஆண்டின் 18ம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின்மூலம் நிர்மாணிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனம் ஆகும். ஆணைக்குழுவின் நோக்கமானது அரசியலமைப்புச் சட்டத்தின் IV வது பந்தியில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கவனமாயிப்பதும், கண்காணிப்பதுமாகும்.

### நோக்கு

பொது மக்களுக்குச் சேவையினை வழங்குகின்ற சகல நிறுவனங்களும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் செலுத்தும் நிறுவனமாக இருத்தல்.

### செயற்பாடு

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக நுண்ணாய்வு, கண்காணிப்பு கல்வி மற்றும் போதனைகளினூடாக பொதுமக்களின் இருமொழித் தேவைகளை வழங்குதல்.

### குறிக்கோள்கள்

அ) அரசகரும மொழிகளின் உபயோகம் தொடர்பிலான கொள்கை நெறிகளை விதந்துரைத்தல், அத்துடன் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இசைந்தொழுகுவதைக் கண்காணித்தலும், மேற்பார்வை செய்தலும்

ஆ) (இதனகத்துப் பின்னர் ‘‘இயைபான மொழிகள்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் மொழிகளின் உபயோகத்தை, அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் தாற்பரியத்துக்கும் நோக்கத்துக்கும் இணங்க உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளையும், வழிமுறைகளையும் எடுத்தல்.

இ) அரசகரும மொழிகள் நன்கு மதிக்கப்படுதலை மேம்படுத்துவதுடன், அவற்றின் அந்தஸ்து, சமத்துவம், உபயோக உரிமை என்பன ஏற்றுக்கொள்ளப்படுதல், பேணப்படுதல், அத்துடன் தொடர்ந்து பேணப்படுதல் மேம்படுத்தல்.

ஈ) தம் நடைமுறைகளினால் வரும் ஏதாவது முறைப்பாடுகளுக்கு பதிலாக இரு வழிகளிலும் ஆய்வு நடாத்துதல் மற்றும் இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சரி செய்தல்.

குறித்த நோக்கங்களை நிறைவு செய்ய ஆணைக்குழு நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்காணும் 04 பிரதான காரணிகளுள் அடங்கும்

1. கண்காணிப்பு - அரசகரும மொழிப்பாவனை சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் அரச இயந்திரத்தினூடாக சரியாகப் பின்பற்றப்படுகின்றதா என்பது சம்பந்தமாகக் கவனித்தல் (மொழி ஆய்வுகள் நடாத்துதல், விசாரணை, அளவீடு செய்தல்)
2. கல்வி – குறித்த மொழிகளின் தராதரம் அல்லது பாவனை பற்றி (மக்களுக்குத் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்)
3. நுண்ணாய்வு – அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மொழி உரிமையினை மீறுதல் சம்பந்தமான முறைப்பாடுகள்
4. அறிவுரைகள் - அடிப்படைக் கொள்கையினைத் தயாரித்தல்.

மேற்குறிப்பிட்ட பிரிவுக்குட்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் ஆணைக்குழுவினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை
## அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் பொருளாதார முன்னேற்றம்




| தொ /இல | செயற்பாடு | உத்தேசிக்கப்பட்ட தொகை | உண்மைச் செலவு | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | அதிகார சபைகள் மற்றும் சபைகளிலுள்ள நிறுவனத் தலைவர்களுக்கு அறிவூட்டல் | 200,000.00 | 100,000.00 | 50% |
| 02 | அரசகரும மொழிக் கொள்கை சம்பந்தமாக தனியார் நிதி நிறுவனத் தலைவர்களுக்கு அறிவூட்டுதல். | 200,000.00 | 150,000.00 | 75% |
| 03 | மொழி ஆய்வுகள் 2013 வரை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான பின்னூட்டல் நடாத்துதல். | 200,000.00 | 100,000.00 | 50% |
| 04 | 2013ம் வருடம் வரை ஆய்வுக்குட்படுத்திய சிறுபான்மை மக்களின் விகிதாசாரம் 15% கூடுதலான பிரதேச செயலாளர் பரிவுகளில் இருக்கும் அரச நிறுவனங்கள் ஆய்வுக்குட்படுத்தல். | 200,000.00 | 175,000.00 | 87.5% |
| 05 | அரசகரும மொழிக் கொள்கையினை மீறுதல் சம்பந்தமாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை நுண்ணாய்வு செய்தல். | 100,000.00 | 50,000.00 | 50% |
| 06 | நாடளாவிய ரீதியில் பொதுமக்களுக்கு அறிவூட்டல் | 4,000,000.00 | 2,700,000.00 | 67.5% |
| 07. | சமூக ஒருமைப்பாட்டு வாரம் | 2,000,000.00 | 1,900,000.00 | 95% |
| | மொத்தம் | 6,900,000.00 | 5,175,000.00 | 75% |

## 2014ம் ஆண்டு அரசகரும ஆணைக்குழுவினால் நடைப்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1.அதிகார சபைகள் மற்றும் சபைகளிலுள்ள நிறுவனத் தலைவர்களுக்கு அறிவூட்டல்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகாரசபைகள் மற்றும் சபைகளின் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.

அரசியலமைப்புச் சட்டத்தின் IVம் அத்தியாயத்தின் (22)(6)ம் உறுப்புரையின் படி கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் அரச நிறுவனங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி இந்த நிறுவனத்தினூடாக சேவைகளை வழங்குகின்ற பொதுமக்களின் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எனின், தமது தாய்மொழிகளில் தமக்கு அவசியமான சேவைகளைப் பெறுவதற்காக அதிகாரசபைகளும், சபைகளுமாகிய நிறுவனங்களும் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

சகல அரச நிறுவனங்களிலும் பொதுமக்கள் சேவையினைக் கவனிக்கும் போது அரசியலமைப்புச் சட்டத்தின் IV வது அத்தியாயத்தின் 22(1), 22(2), 22(3), 22(4), மற்றும் 22(5) பந்திகளுக்கு ஏற்ப செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதன்படி நிறுவனத்தின் பெயர்ப்பலகை,பிரிவுப் பெயர்ப்பலகைகள் மற்றும் வாகன பெயர்ப்பலகைகள் மும்மொழிகளில் எழுதுதல், பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சகல ஆவணங்களும் மும்மொழிகளில் தயாரித்து பொதுமக்களுடன் மேற்கொள்ளும் வாய்மொழித் தொடர்பாடல் அரசகரும மொழிகளில் செயற்படுத்தல் மற்றும், கிடைக்கின்ற கடிதங்களுக்கு அம்மொழியிலேயே (சிங்களம் மற்றும் தமிழ்) பதில் அனுப்புவது அரச நிறுவனங்களின் ஊடாக நடைபெறல் வேண்டும்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்யும் போதும் சபைகள் மற்றும் அதிகாரசபைகள் சம்மந்தமாகவும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன்படி மொழி உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலைமையினைக் கவனத்திற்கு எடுத்து நியதிச்சட்ட அமைப்புகள் மற்றும் அதிகார சபைகளின் தலைவர்கள் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அறிவுரை வழங்குவதற்காக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் அறிவுரை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அந்த நிகழ்ச்சித் திட்டம் 2014.06.02ம் திகதி தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார அவர்களின் தலைமையின் கீழ் அரசகரும மொழிகள் ஆணைக்குழுக் காரியாலயத்தில் நடைபெற்றது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கியதோடு

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மேனக்க ஹரங்கஹ அவர்களால் இலங்கையில் அரசகரும மொழிக் கொள்கைச் சட்டத்தின் பார்வையில் மற்றும் அதன் நடைமுறைப் பாவனை சம்பந்தமாக விரிவுரையாற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் அரசகரும மொழிகள் ஆணையாளர் திரு.ஜே.டீ.சீ. ஜயசிங்க அவர்களும், தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு.பிரசாத் ஆர் ஹேரத் ஆகியோர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டதோடு கலந்துரையாடலும் நடைபெற்றது. அதில் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது எழுகின்ற பிரச்சினைகளை இனம் கண்டதோடு அந்தப்பிரச்சினைகளுக்கான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.



**2.அரசகரும மொழிக் கொள்கை சம்பந்தமாக தனியார் நிதி நிறுவனத் தலைவர்களுக்கு அறிவூட்டுதல்.**

1991ஆம் ஆண்டின் 18ம் இலக்க சட்டத்தில் தாபிக்கப்பட்ட அரசகரும மொழிகள் ஆணைக்குழு இலங்கை பிரஜைகளுக்கு இருமொழிகளிலும் தத்தம் சேவைகளைப் பெற்றுக் கொள்வதனை விருத்தி செய்ய பல்வகையான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சட்டத்தின் 31வது உறுப்புரையின்கீழ் மக்களின் நன்மைக்காக ‘‘பொது நிறுவனங்கள்’’ கீழ் விழுந்துவிடாத நிறுவனங்கள் சம்பந்தமாகவும் அரசகரும மொழிக் கொள்கைக்கு உரிய சிபார்சினை வழங்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

அதன்படி 2014.12.23ம் திகதி இலங்கை மத்திய வங்கி ‘‘வங்கி விது பியச’’ கலந்துரையாடல் மண்டபத்தில் தனியார் நிதி நிறுவனத் தலைவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது. தனியார் நிதி நிறுவனங்களிற்காக இப்படியான நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்தது பொதுமக்களுடன் நிரந்தரமாக செயற்படுகின்ற நிறுவனங்களான வங்கிகள் அற்ற நிதி நிறுவனங்கள் பொதுமக்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது மொழிப் பிரச்சினை ஏற்படுவதாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளையும் கவனத்திற் கொண்டாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக தனியார் நிதி நிறுவனங்களின் 56 தலைவர்கள் அழைக்கப்பட்டதோடு பிரதான அதிதியான விரிவுரையாளரான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மேனக ஹரன்கஹ அவர்களும், இலங்கை மத்திய வங்கியின் வங்கியற்ற நிதி நிறுவனங்கள் கண்காணிப்பு திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திரு.ஆர்.டீ.டபிள்யூ பள்ளேகம அவர்களும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் திரு நிமல் ஆர் ரணவக்க

அவர்களும் அரசகரும மொழிகள் ஆணையாளர் திரு.ஜே.டீ.சீ.ஜயசிங்க அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமான அறிவூட்டலின்பின் நடைபெற்ற வினாக்களும் மற்றும் உரையாடலின் போது தனியார் நிதி நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனம் கண்டதோடு அதில் அதிகமானது தனியார் நிதி நிறுவனங்கள் பொதுமக்களோடு கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் போது பயன்படுத்தப்படும் ஆவணங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பயன்படுத்தப்படுதல், அந்த நிறுவனங்களில் கணக்காய்வு அறிக்கைகளும் ஆங்கில மொழியில் மாத்திரம் தயாரித்தல், இரண்டாம் மொழி பற்றிய அறிவுள்ள உத்தியோகத்தரின் பற்றாக்குறையினையும் சுட்டிக் காட்டமுடியும்.

அங்கு தனியார் நிதி நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அரசகரும மொழிக்கொள்கையின்படி தயாரிக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின்



ஒத்துழைப்பு அவசியமென்றும், தனியார் நிதிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழித்திறன் விருத்திக்கு செயலமர்வு அவசியமெனத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அங்கு முதலாவது நடவடிக்கையாக தனியார் நிதி நிறுவனங்கள் பொதுமக்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது பாவிக்கப்படுகின்ற ஆவணங்கள் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு வரவழைக்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**3.மொழி ஆய்வுகள்**

I. 2013 வரை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான பின்னூட்டல் நடாத்துதல்.

2013 ஆம் வருடம் வரை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனங்களுக்காக ஆணைக்குழு சிபாரிசினை வழங்கியுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக குறித்த நிறுவனத்தலைவர்களும் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பர்.

சிபாரிசினை நடைமுறைப்படுத்த விசாரணை செய்வதற்கு பின்னூட்டல் மொழி ஆய்வுகளின் நோக்கமாகும். 2014 ஆம் ஆண்டில் 09 பிரதேச செயலாளர் காரியாலயங்கள், 02 பொலிஸ்

நிலையங்கள், 01 வைத்தியசாலை என்பனவற்றில் மொழி ஆய்வு செய்யப்பட்டன.

**II.கொழும்பு மாநகர சபை மொழி ஆய்வு.**

இதற்கு மேலதிகமாக கொழும்பு மாநகரத்தினுள் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான செயற்திட்டம் ஆணைக்குழுவினால் நடைபெற்றது. இங்கு கொழும்பு மாநகர சபையின் திணைக்களங்கள் 16 மற்றும் 214 பிரிவுகளில் ஆய்வுக்குட்படுத்தி சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது. இதன்கீழ் நகர சபை எல்லைக்குட்பட்ட சகல வீதிப்பெயர்ப்பலகைகளும் மும்மொழிகளில் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சகல நிறுவனங்களிலும் அரசகரும மொழிக் கொள்கையினைச் சரியாக நடைமுறைப்படுத்துவதனூடாக பொதுமகனுக்குத் தான் விரும்பிய மொழியில் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் திறன் இதனூடாகக் கிடைக்கிறது.

**III.2013ம் வருடம் வரை ஆய்வுக்குட்படுத்திய சிறுபான்மை மக்களின் விகிதாசாரம் 15% கூடுதலான பிரதேச செயலாளர் பரிவுகளில் இருக்கும் அரச நிறுவனங்கள் ஆய்வுக்குட்படுத்தல்.**

அரசகரும மொழி ஆணைக்குழுவின் ஊடாக 2013 வரை ஆய்வுக்குட்படுத்தப்படாத அரச நிறுவனங்களை ஆய்வு செய்தல் இந்த வருடத்தில் நடைபெற்றது. இங்கு நிறுவனங்களைத் தெரிவு செய்யும் போது ஒவ்வொரு அரச நிறுவனங்களும் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் மக்கள் விகிதம் கவனத்திற் கொள்ளப்படும். மொழி ரீதியாக சிறுபான்மை 20% த்திற்கு கிட்டிய பிரதேச செயலாளர் காரியாலயங்களில் அமைந்துள்ள அரச நிறுவனங்கள் ஆய்வுக்குட்படுத்த விசேட கவனம் செலுத்தப்படும். இந்த வருடத்தில் 05 பிரதேச செயலாளர் செயலகங்கள், 12 பொலிஸ் நிலையங்கள், 16 வைத்தியசாலைகள், 01 மாநகர சபை, 01 தபால் நிலையம், 03 வேறு நிலையங்களில் மொழி ஆய்வுகள் நடைப்பெற்றன.

**04.அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி சிற்றறைகளை ஆய்வுக்குட்படுத்தல்.**

1991ம் ஆண்டின் 18ம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் சட்டத்தில் வழங்கப்பட்டள்ள அதிகாரங்களின்படி அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் மூலம் 2012, 2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியின்போது அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அரச நிறுவங்களினால் முன் வைக்கப்படுகின்ற கண்காட்சிச் சிற்றறைகள் மொழிக் கொள்கையின்படி முன்வைக்கப்பட்டுள்ளதா என்பது சம்பந்தமாக ஆய்வு நிகழ்த்தப்பட்டது 2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் நடைபெற்ற இந்த மொழி மதிப்பீடு ஆய்வுக்காக நிதிப்பங்களிப்பு வழங்கியது தேசிய மொழிச் செயற்திட்டத்தினூடாகும்.

2014ம் வருடத்தில் தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி குளியாப்பிட்டி நகரத்தில் நடைபெற்றதோடு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவும் அதற்கு

இணங்க கண்காட்சி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கண்காட்சிச் சிற்றறைகள் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப முன்வைக்கப்பட்டதா என்பது சம்பந்தமாக ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின்போது தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் நடைபெற்ற அரச பிரிவில் கண்காட்சி சிற்றறைகள் 400 அளவில் ஆய்வுக்குட்படுத்தி சிறந்த சிற்றறைகள் 3 தெரிவு செய்யப்பட்டன.

இந்த மதிப்பீட்டின்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்கள் 30 போர் அடங்கிய குழுவின் மூலம் குறித்த சகல சிற்றறைகளும் ஆய்வு நடாத்திச் சேகரித்த தரவுகளில் மொழி விஞ்ஞானம் சம்பந்தமாக விசேட அறிவும், ஆற்றலும் கொண்ட பேராசிரியர்கள் 5 பேர்கள் அடங்கிய விசேட குழுவின் மூலம் மதிப்பீட்டுக்கு உள்ளடக்கப்பட்டு இந்தத் தெரிவுகள் நடைபெற்றன. அதன்படி



இலங்கை மத்திய வங்கி,துறைமுகங்கள் அதிகாரசபை, மற்றும் வெளிநாட்டு முகவர் செயலகம் ஆகிய அரசநிறுவங்களின் ஊடாக முன்வைக்கப்பட்ட சிற்றறைகள் மூன்றும் அரசகரும மொழிகள் விருதுகள் 3ஐயும் வெற்றி பெற்றுக் கொண்டன. அதே போன்று ஒவ்வொரு கண்காட்சிச் சிற்றறைகளும் பெற்றுக் கொண்ட புள்ளி மட்ட அளவினை உள்ளடக்கிய அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

**05.அரசகரும மொழிக் கொள்கையினை மீறுதல் சம்பந்தமாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை நுண்ணாய்வு செய்தல்.**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் உரிமையாகியுள்ள அதிகாரத்தின்படி 2014ம் வருடத்தில் மொழி உரிமையினை மீறுதல் சம்பந்தமாக நடைபெற்ற முறைப்பாடுகள் நுண்ணாய்வு செய்தது பின்வரும் முறைகளிலாகும்.

| வருடம் | 2014ம் வருடத்தினுள் கிடைத்த முறைப்பாடுகள் | 2013ம் வருடத்தில் முன்கொணரப்பட்ட முறைப்பாடுகள் | 2014ம் வருடத்தில் முடிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | நுண்ணாய்வு செய்ய வேண்டிய முறைப்பாடுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2013ம் வருடத்தில் முறைப்பாடுகள் | 2014ம் வருடத்தில் முறைப்பாடுகள் | 2013 | 2014 |
| 2014 | 106 | 88 | 65 | 54 | 23 | 52 |

- 2013ம் வருடத்தில் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் 156 கிடைத்ததோடு அந்த வருடத்தில் டிசம்பர் மாதம் முடியும் போது அதில் 178 நுண்ணாய்வு செய்து முடிந்திருந்தது.

2014ம் வருடத்தில் நுண்ணாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிபார்சுகள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

I. இலங்கை மின்சாரசபையினால் பாவனையாளர்களுக்கு அனுப்பப்படுகின்ற

பட்டியல்களில் சகல அறிவுரைகளும் மும்மொழிகளிலும் பிரசுரித்தல்.

II. கல்வி அமைச்சினால் நானாவித விடயங்கள் சம்பந்தமாக வழங்கப்பகின்ற பொதுவான சுற்றறிக்கைகள், கடிதங்கள் மும்மொழிகளில் வழங்குதல்.

III. வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளரின் காரியாலயத்தின் உத்தியோகபூர்வ பெயர்பலகை மும்மொழிகளிலும் தயாரித்தல்

IV. மாத்தறை அதிவேகப்பாதையில் பிரவேசிக்கும் இடத்தில் இருக்கும் "NILWALA GATE" என்பது மும்மொழிகளிலும் காட்டப்படுதல்.

V. அதிவேகப்பாதைகளில் பொதுமக்களின் பார்வைக்கான அறிவித்தல்களும் இலத்திரனியல் பெயர்பலகைகளும் மும்மொழிகளிலும் குறித்த அறிவிப்புகள் காட்சிப்படுத்தல்.

VI. அரச வங்கிகளில் பொதுமக்கள் பார்வைக்கான அறிவுறுத்தல் பலகைகள், அறிவித்தல் பலகைகள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தல்.

**6.பாடசாலை மட்டத்தில் பாடசாலை வட்டங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்தல் மற்றும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களை அந்த வட்டங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தல்.**

2013 மற்றும் 2014 வருங்களில் ஆணைக்குழு ஏற்பாடு செய்த பாடசாலை விவாதப்போட்டிகளில் மற்றும் பேச்சுப் போட்டிகளின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் முக்கியத்துவம் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்ந்தது. இதில் எதிர்கால நடவடிக்கையாக பாடசாலைகளுக்கிடையே மொழிவிருத்தி வட்டங்களை உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக பாடசாலைச் சிறார்களின் அறிவு நற்சிந்தனை கல்விவிருத்தி என்பவற்றுள் மும்மொழிச் சூழலை இலங்கையினுள் ஸ்தாபிப்பதும் நீண்ட கால இலக்கினைக் கொண்ட மொழி வட்டங்களை அமைப்பதற்காக அரசகரும மொழி ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்கீழ் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் மொழிவட்டங்கள் அமைக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு எதிர்பார்க்கிறது. இதில் பாடசாலையினுள் பிரதான பெயர்ப்பலகை முதல் பாடசாலையினுள் நிகழும் சகல செயற்பாடுகளும் இரு மொழிகளிலும் நடைபெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மொழி வட்டங்கள் ஊடாக நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இருமொழிகளால் இதயபூர்வமாக இணைந்த ஒரே இலங்கைத் தேசத்தினைத் தோற்றுவிப்பதனையே நோக்கமாகக்கொண்டுள்ளதோடு இதனுள் மாணவர் பரம்பரையை ஈடுபடுத்துவதற்காகவும், பாடசாலை மாணவர்களுள் மும்மொழிப் பாவனை சம்பந்தமாகவும், நற்சிந்தனையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தவும் பாடசாலையினுள் கேட்கும், காணும், வாசிக்கும் சகலவற்றையும் மும்மொழிகளிலும் செயற்படுத்துவதற்காகவும்

எதிர்கால சமூகத்தினை மும்மொழிச் சமூகமாக பரிமாற்றம் செய்யும் திறனை விருத்தி செய்வதும் மொழிவட்டங்கள் அமைப்பதன் நோக்கங்களுக்குள் அடங்கும்.

மொழி வட்டங்களுக்குள் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஒவ்வொரு தரத்திலும் ஒவ்வொரு மாணவர்கள் என்ற ரீதியில் மாணவ பிரதிநிதிகளாக கொண்ட சபையாக இருக்கும்

மொழி வட்டம் அமைப்பதன் மூலம் செயற்படுத்த உத்தேசித்துள்ள செயற்பாடுகளை இனங்கண்டுள்ளதோடு அவற்றினை பாடசாலைகளில் பிரதான பெயர்பலகைகள் முதல் ஏனைய சகல அறிவித்தல் பலகைகளிலும் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தல், பாடசாலையினுள் நடைபெறும் சகல செயற்பாடுகளிலும் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் செயற்படுத்துதல் மும்மொழிப்போட்டி நடாத்தி வெற்றியாளர்களுக்கு பரிசுகளும்,மற்றும் சான்றிதழ்களும் வழங்குதல், மும்மொழி அரிச்சுவடி பாடசாலையினுள் காட்சிப்படுத்தப்படுதல் மற்றும் தினமும், வாராந்தமும், மாதாந்தமும் சொற்கள் மற்றும் வாக்கியங்கள் அமைப்பதும் அதற்காக புள்ளிகள் வழங்கி வெற்றியாளர்களுக்கு உற்சாகமூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், ஏனைய மொழிகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நட்பு பாடசாலைகளுக்கிடையே கலாச்சார மற்றும் நட்புறவினை பரிமாற்றம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல், தேசிய விழாக்களில் மும்மொழிகளிலும் தயாரித்து செயற்படுத்தல். சுற்றுப்புறங்களில் வாழும் மக்களின் மொழித் தேவைகளின் போது அவற்றிற்கு ஒத்துழைப்பு நல்கி ஒழுகுதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டதாகும்.

மொழி வட்டங்கள் அமைப்பதற்காக அரசகரும மொழிகள் ஆணைக்குழு கல்வி அமைச்சுடன் சம்பந்தப்பட்டு உரிய கருமங்களை நெறிப்படுத்தும். இதற்காக பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு கல்வி அமைச்சினால் அவை பாடசாலைகளுக்கு அனுப்புவதற்குத் தயாராக உள்ளன.

## 7. நாடளாவிய ரீதியில் பொதுமக்களுக்கு அறிவூட்டல்

### 7.1 அச்சிடப்பட்ட ஊடக அறிவித்தல்கள்

அச்சிடப்பட்ட ஊடக அறிவித்தல்கள் பிரசுரிப்பது அடிப்படையான இரண்டு நோக்கங்களிலாகும். அதில் ஒரு நோக்கமாவது தமது மொழி உரிமையினை பொதுமகனுக்கு அறிவூட்டுவதன் மூலம் இருமொழியுடனான அரச சேவையில் பொதுமக்களின் ஆவலினைக் கூட்டுவதாகும்.

இருமொழி பொதுமக்கள் சேவையினை வழங்குவது சம்பந்தமாக அரச ஊழியர்களுக்குள்ள சட்டரீதியான பிணைப்பு சம்பந்தமாக அறிவூட்டுதல் இங்கே அடுத்த நோக்கமாக காட்டலாம்.

இலங்கை வாழ்மக்களின் பிரதான சமய கலாச்சார மற்றும் தேசிய முக்கியத்துவத்துடனான தினங்களை நோக்கமாகக் கொண்ட இந்த அறிவித்தல்கள் இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது. அந்தத்தினங்களுக்காக வாழ்த்துச் செய்திகளும், மக்களின் மொழி

உரிமைகள் பற்றியும் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் சம்பந்தமான செய்திகளும் இந்த அறிவித்தல்களில் உள்ளடங்கும். அதன்படி 2014ம் வருடத்தில் பிரசுரிக்கப்பட்ட இவ்வாறான அறிவிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- 2015 புதுவருடத்திற்கு வாழ்த்துச் செய்தி
- சிங்கள, இந்து புது வருடத்திற்காக வாழ்த்துச் செய்தி
- ஹஜ் பண்டிகைக்கான வாழ்த்துச் செய்தி
- நத்தார் பண்டிகைக்கான வாழ்த்துச் செய்தி

இதற்கு மேலதிகமாக 2014ம் வருடத்தில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் சமூக ஒருங்கிணைப்பு வாரத்திற்காக நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டிகள் பற்றி தெளிவூட்டுவதற்காகவும், ஆணைக்குழு இராஜகிரியவில் இருந்து பொரல்லயில் புதிய காரியாலய வளாகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது சம்பந்தமாக பொதுமக்களுக்குத் தெளிவூட்டுவதற்காகவும், தினமின செய்திப் பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. இந்த அறிவித்தல்களின் கட்டமைப்புக்கள் கீழேகாட்டப்பட்டுள்ளன.





**7.2.தேசத்துக்கு மகுடம் கண்காட்சிச் சிற்றறைகள் நிர்மாணித்தலும் கண்காட்சிச் சிற்றறைகளுள் படிகம் காட்சிப்படுத்தலும்**

தேசத்துக்கு மகுடம் மொழி மதிப்பீட்டு ஆய்வோடு இணைந்ததாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினூடாக தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தினுள் படிகம் நிர்மாணிக்கப்பட்டதுடன் இந்த படிக நிர்மாணத்தின் நோக்கம் இரண்டாகும்.

1. கண்காட்சிச் சிற்றறைகள் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப நிர்மாணித்தல் மற்றும் அவற்றினை மதிப்பிடுதல் சம்பந்தமாக கண்காட்சி வளாகத்தில் அரச நிறுவனங்களுக்கு அறிவூட்டுதல்.

2. கண்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்.

தேசத்தக்கு மகுடம் கண்காட்சி சிற்றறைகள் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப அமைப்பது சம்பந்தமாக உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்மாணிப்பவர்களுக்கும் அறிவூட்டுதலுக்காக கண்காட்சி ஆரம்பிப்பதற்கு ஒருமாத காலத்துக்கு முன்பே பிரதான 3 வாசல்களின் அருகில் அரசகரும மொழி விருதுகளை வெல்லுங்கள் என்ற அறிவித்தல்கள் நிறுவப்பட்டன.

அதேபோல கண்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக கண்காட்சிச் சிற்றறைகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் கண்காட்சி வளாகம் முழுவதும் மொழிகளின் உரிமை சம்பந்தமாக ஒன்றுக்கொன்று வித்தியாசமான

செய்திகள் 5ஐ உள்ளடக்கிய படிகங்கள் 300 பொதுமக்கள் பார்வைக்காக நிறுவப்பட்டன.




**8.சமூக ஒருமைப்பாட்டு வாரம்**

**மேல் மாகாண அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான திறந்த தனிப் பேச்சுப்போட்டி**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடைபெற்ற விவாதப்போட்டித் தொடருக்காக பாடசாலைச் சிறார்கள் விசேட உற்சாகத்தோடு பங்குபற்றியமையால் 2014ம் வருடத்திலும் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு மேல்மாகாணப் பாடசாலைகளுக்கிடையே பேச்சுப்போட்டி நடாத்தப்பட்டது. விவாதப் போட்டித் தொடருக்காக கலந்து கொள்ள முடிந்தது, விவாதக் குழுக்களோடு கூடிய பாடசாலைகளுக்கு மாத்திரமே. ஆகையால், தனிப்பட்ட திறமைகளுடன் கூடிய அதிகமான மாணவ, மாணவிகள் அதிகமானவர்கள் கலந்து கொள்ளச் செய்யும் நோக்கத்தில் பேச்சுப் போட்டி நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக ஒழுங்கிணைப்பு வாரம் - 2014 முன்னிட்டு இந்த பேச்சுப் போட்டி மேல்மாகாண சபை பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டது. இதற்காக பத்திரிகை அறிவித்தல்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி தமிழ் மொழி விண்ணப்பங்கள் 120 மற்றும் சிங்கள மொழி விண்ணப்பங்கள் 239 அளவில் ஆணைக்குழுவுக்குக் கிடைத்தன.

மூன்று போட்டித் தொடர்களின் கீழ் இந்தப் போட்டித் தொடர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெற்றதோடு இறுதிப்போட்டி 2014.07.21ம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதில் முதலாம்,இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு பரிசுகளும்,விருதுகளும் வழங்கப்பட்டன.

இறுதித்தின போட்டியின் போது சமூகமளித்திருந்த ரசிகர்களின் வாக்கின் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மக்கள் அபிமானம் பெற்ற பேச்சாளர் தெரிவு நடைபெற்றது.

அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக பாடசாலைச் சிறார்களிடையே இருக்கும் அறிவு மற்றும் சிறந்த நற்சிந்தனையினை விருத்தி செய்வதினூடாக எதிர்காலத்தில் இருமொழிகளுடனான அரச சேவையினை உருவாக்குவதே அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.



**9. 2014 செயற்திட்டத்திற்கு மேலதிகமாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**9.1.நுவரெலியா மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்.**



**9.2.வடமாகாண அழைக்கப்பட்ட பாடசாலைகளின் விவாதப்போட்டித் தொடர்.**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 2013 வருடத்தில் மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கிடையே விவாதத் தொடரை நடத்தியது. இந்தப் போட்டிக்காக பாடசாலைச் சிறார்கள் விசேட உற்சாகத்துடன் பங்குபற்றினர். இந்த நிலையை கவனத்திற் கொண்டு வடமாகாணத்திலும் பாடசாலைகளுக்கிடையிலான விவாத் தொடர் ஒன்றினை நடாத்துவதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி வடமாகாணத்தில் அழைக்கப்பட்ட பாடசாலை விவாதப்போட்டி 2013.10.18ம் திகதி நடாத்தப்பட்டது. இப்போட்டித் தொடரின் தொனிப்பொருள் "அரசகரும மொழிக் கொள்கை, அதன் பயன்பாடு மற்றும் இனப்பிரச்சினையும் சமாதானமும்" என்பதாகும். நாட்டின் எதிர்காலச் சிறார்களுள் இரு மொழிகள் பாவனையில் பெறுமதி மிக்க சிறந்த நற்சிந்தனைகளைக் கட்டியெழுபப்புவதே இப்போட்டித் தொடரின் அடிப்படை நோக்கமாகும். வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் பாடசாலைகளை உள்ளடக்கக் கூடியதாக இப்போட்டித் தொடர் நடைபெற்றது. தமிழ்மொழிப் பாடாசாலைகள் 16ம் மற்றும் சிங்கள மொழிப்பாடசாலைகள் 6ம் இதற்கு தெரிவு செய்யப்பட்டன.

2013.10.18ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டித் தொடரில் சிங்கள மொழி மூலம் சம்பியனாக உ/பெரகும் வித்தியாலயமும் இரண்டாவது சம்பியனாக அழகன்ன வித்தியாலயமும் தமிழ்மொழி மூல சம்பியனாக வித்தியானந்தா வித்தியாலயத்துக்கும் இரண்டாவது சம்பியனாக புதுக்குடியிருப்பு வித்தியாலயமும் வெற்றி பெற்றன.

அதன்படி 2014.01.28ம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி மண்டபத்தில் இந்த விவாதத் தொடரின் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்பட்டன. வடமாகாண முதலமைச்சர் கௌரவ சீ.வீ. விக்கினேஸ்வரன் அவர்களும்

மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார அவர்களும் இந்த விழாவிற்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

சான்றிதழ் வழங்கலின்விசேட அம்சம் என்னவெனில் தமிழ் மற்றும் சிங்கள மொழி மாணவ மாணவிகளைக் கொண்ட இரு குழுக்களுக்கும் இடையே கண்கவர் விவாதப்போட்டி நடைபெற்றதாகும். இங்கு மொழி பெயர்ப்பு கருவிகளின் உதவியுடன் சிங்கள தமிழ் மொழி மாணவர்களிடையே தொடர்பாடல் ஏற்படுத்தப்பட்டது.





**9.3.பாவனையாளர் சேவை அதிகார சபையுடன் நடைபெற்ற கலந்துரையாடல்.**

பாவனைப் பொருட்கள் கொள்வனவின்போது பாவனையாளரால் அவசியமாகத் தெரிந்திருக்க வேண்டிய தகவல்களான பாவிப்பு, காலம் முடிவு பெறுதல், பொதி செய்யப்பட்டுள்ளமை. அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தயாரிப்பது சம்பந்தமாக பாவனையாளர் சேவை அதிகாரியுடன் உரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் சம்பந்தமாக எதிர்காலத்தில் சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக் குழுவுடனும் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டது.

**9.4.பெருந்தோட்டக் கைத்தொழில்சார் பிரதிநிதிகளுக்கு அறிவூட்டல்**

2014ம் வருடத்தில் ஆணைக்குழு பொருந்தோட்டக் கைத்தொழில்சார் உறுப்பினர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் தோட்டங்களை அண்மித்த தமிழ்மக்களின் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதோயாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் சமூக அழுத்தங்கள் என்னவெனில் அரசநிறுவனங்களில் அரசகரும மொழிக்கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் சட்ட ரீதியான கட்டுப்பாடும் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் சம்பந்தமாக அறிவூட்டப்பட்டு பொது மக்களின் மொழி உரிமையினைப் பாதுகாப்பதுமாகும்.

**9.5.சிறு அறிக்கை நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல்.**

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட சிறு அறிக்கை நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் இந்த வருடத்துள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நிகழ்ச்சித்திட்டம் “மொழியிலிருந்து இருமொழிக்கு” எனப் பெயரிடப்பட்டுள்ளது. அரசகரும மொழிக் கொள்கை சம்பந்தமாகத் தெளிவு படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களில்

பயன்படுத்துவதே இந்த அறிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதன் நோக்கமாகும்.

### 9.6.ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மொழி பெயர்ப்பு உதவிகள்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடைபெற்ற அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறாக பல வகையான அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் தத்தம் நிறுவனத்தினுள் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தும் பெயர்ப்பலகைகள், மாதிரிப்பத்திரங்கள், மும்மொழிகளிலும் தயாரிப்பதற்குத் தேவையான மொழி பெயர்ப்பு உதவி சம்பந்தமான கோரிக்கைகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டள்ளன.

அதன்படி ஆணைக்குழு அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழி பெயர்ப்புப் பிரிவுக்கு அந்த ஆவணங்களை அனுப்பி மொழி பெயர்ப்புக்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ் வருடத்தில் வழஙகப்பட்ட மொழி பெயர்ப்பு உதவிகள் பின்வருமாறு.

I. இலங்கை இராணுவ முகாம்களின் சகல பெயர்ப்பலகைகளும் மும்மொழிகளிலும் தயாரித்தல்.
II. சீதாவாக்கை பிரதேச சபையில் தற்போது பாவிக்கப்படுகின்ற மாதிரிப்பத்திரங்கள் மும்மொழிகளிலும் தயாரித்தல்
III. மட்டுப்படுத்தப்பட்ட “ருஹுணு டிவலொப்மென் கண்டக்டர்ஸ் என்ட் எஞ்சினியர்ஸ்” தனியார் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட பலவகையான வீதி அபிவிருத்திகளின் பெயர்ப்பலகைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படல்.

### 9.7.அரச நிறுவனங்களில் கடிதத்தலைப்புகள் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தயாரித்தல்.

அரச நிறுவனங்களின் கடிதத் தலைப்புக்களில் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தயாரிப்பதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குவினால் அடிக்கடி அறிவூட்டல் மற்றும் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக நிலவும் நிலைமை சம்பந்தமாக அலசி ஆராய சகல அரச நிறுவனங்களிலும் கடிதத்தலைப்புக்கள் சம்பந்தமாக ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

அதன்படி சகல அரச நிறுவனங்களிலும் பாவிக்கப்படுகின்ற கடிதத் தலைப்புகளில் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்யவும் அவ்வாறு தயாரிக்கப்படாத கடிதத் தலைப்புக்கள் அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப தயாரிப்பதற்குத் தேவையான அறிவுரைகளையும் சிபாரிசுகளையும் ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ளன.
இந்த ஆய்வின் போது கீழ்காணும் அரச நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டன.

1. மாவட்ட செயலாளர் செயலகங்கள்
2. பிரதேச செயலளார் செயலகங்கள்
3. மாநகர சபைகள்
4. நகர சபைகள்
5. பிரதேச சபைகள்

குறித்த ஆய்வுக்கு உரிய கடிதங்களின் தலைப்பு அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதனை

அவதானித்தது கீழ்க்காணும் 5 மூலப்பிரமாணங்களின் அடிப்படையிலாகும்.

1. காரியாலயத்தின் / நிறுவனத்தின் பெயர் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டிருத்தல். (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறையே தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மற்றும் ஏனைய மாகாணங்களில் முறையே சிங்கள, தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காரியாலயங்களிலும் / நிறுவனங்களிலும் பெயர் தயாரித்திருத்தல்.
2. கடிதத்தலைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட தொலைபேசி இலக்கம், பெயர்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல் பெயர்கள் எல்லாம் மும்மொழிகளிலும் தயாரித்தல்.
3. கடிதத்தலைப்புக்களில் மேலும் கீழும் எழுதப்படும் சிறிய மேற்கோள்கள் சகலதும் மும்மொழிகளிலும் இருத்தல்.
4. எழுத்துக்களில் பிழையின்மை.
5. மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும் சகல சொற்களும்/ வசனங்களும் சம எழுத்துக்கள் அளவிடை (Fond Size) இருக்க வேண்டும்.

## 9.8.வீதி ஆய்வு

மொழி ஆணைக்குழுவினால் 2007/2008 வருடங்களில் அரச நிறுவனங்களில் மொழி வளங்களின்

தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யும் ஆய்வு நடாத்தப்பட்டது. இதற்கான மாதிரியாக 50 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதற்கான பின்னூட்டல் ஆய்வு 2014 ஒக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் வரை நடைபெற்றது. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் இந்த ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் அறிக்கை தயாரிப்புக்கள் என்பன தற்போது வீதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| இல | அரச நிறுவனங்கள் | கடிதத் தலைப்புக்களின் அளவு | தற்போது சிபார்சு வழங்கப்பட்ட கடிதத்தலைப்புகளின் அளவு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட செயலாளர் காரியாலயம் | 25 | 25 |
| 2. | பிரதேச செயலாளர் காரியாலயம் | 319 | - |
| 3. | மாநகர சபைகள் | 23 | 23 |
| 4. | நகர சபைகள் | 41 | 41 |
| 5. | பிரதேச சபைகள் | 271 | - |
| | மொத்தம் | 679 | 89 |

# 06. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் அவற்றின் செயலாற்றுகைகள்

## தேசிய மொழிக் கல்வி மற்றும் கல்வி நிறுவகம்

அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மும்மொழி எண்ணக்கருவை அமுல்படுத்தும் நோக்குடன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் நியதிச்சட்ட நிறுவனமாக 2007ஆம் ஆண்டு 26ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் படி தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி தாபிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 2007 நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த நிறுவனம் அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டதுடன், அந்த அமைச்சு நிலைபெற்றிருந்த இல. 310, காலி வீதி, கொழும்பில் அமைந்திருந்த இடத்தில் இந் நிறுவனம் செயற்படுத்தப்பட்டது. 2010 ஏப்பிரல் மாதம் 25ஆம் திகதியில் இருந்து தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு என்ற பெயரிடப்பட்டதுடன் இந்த நிறுவனம் அந்த அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களில் ஒன்றாக இணைந்து கொள்ளப்பட்டது.

2011 நவம்பர் 15ஆம் திகதியில் இருந்து நிறுவனத்தின் பிரதான அலுவலகம் இல. 155/A, காசல் வீதி, கொழும்பு 08இல் அமைந்துள்ள இடத்தில் உள்ள இடத்தில் நிலைபெற்றதுடன் 2013 செப்படம்பர் மாதம் 03ஆம் திகதியில் இருந்து 2015 பெப்ரவரி 28ஆம் திகதி வரை இரண்டாம் மாடி, கட்டிட இல. 09, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அமைந்திருந்தது. தற்போது இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய என்ற இடத்தில் செயற்பட்டு வருகின்றது. தற்போது நிறுவனம் தனது பணிகளை விரிவுப்படுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தி வருகின்றது. அவற்றில் கீழ் வரும் பயிற்சி கற்கைநெறிகள் முக்கியமானவைகளாகும்.

- அரச உத்தியோகத்தர்களுக்கான பகுதி நேர மொழிக் கற்கைநெறி (மட்டம் I, மட்டம் II, மட்டம் III)
- பொது மக்களுக்கான 150 மணித்தியால சிங்கள மற்றும் தமிழ் கற்கைநெறி.
- அரச உத்தியோகத்தர்களுக்கான 12 நாட்கள் குறுங்கால தங்குமிடமற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- வளவாளர்களுக்கான மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்.
- மொழிபெயர்ப்பு பற்றிய டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம்/ நீண்ட காலம்.)
- அடிப்படை மொழிபெயர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் ( 10 நாட்கள் தங்குமிடமற்ற)
- புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கப்படும் குறுங்கால இரண்டாம் மொழி கற்கைநெறி. (வைத்தியர்கள், பொது நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உயர்தொழில் செய்பவர்கள்)

நிறுவனத்தினூடாக ஒழுங்கமைக்கப்படும் தங்குமிட வசதியுடனான கற்கைநெறிகள் பலவற்றுக்கு கலேவத்தை, அகலவத்தையில் உள்ள பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படும். மிகவும் கண்கவர் பிரதேசத்தில் அமையபெற்றுள்ள இந்த பயிற்சி நிலையத்தில் ஒரே தடவையில் 250 பேர் வரை பங்கு கொள்ள கூடிய மண்டபமும் குழு கலந்துரையாடலுக்கான வசதியுடன் 60 பேருக்கு வசதியுடனான தங்குமிடம் மற்றும் நூலகத்துடன் அமையப்பெற்றதாகும்.

மேலே குறிப்பிட்ட கற்கைநெறிகளை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவதற்கு அனுபவமிக்க வளவாளர்கள் குழுவொன்றின் பங்களிப்பு பெறப்படுவதுடன் நிறுவனத்தின் பணிக்குழுவும் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றது.

**தொலை நோக்கு**

தேசிய மொழிகள் பயிற்சியின் மூலம் இலங்கை மக்களிடத்திலே சமாதானம் மற்றும் சகவாழ்வை மேம்படுத்தல்.

**பணிநோக்கு**

அரசகரும மொழிகள் அமுலாக்குவதற்கு மொழிகள் கற்கைநெறி மற்றும் பயிற்சிக்கு மும்மொழி அறிவுவை விருத்தி செய்யும் கேந்திர நிலையமாக செயற்படல்.

**நோக்கங்கள்**

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு விரும்புகின்றவர்களுக்கு அந்த மொழியை கற்பிக்க கூடிய திறமையான ஆசிரியர்களை உருவாக்குதல்.
2. எழுத்துமூல சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட அரசாங்க மொழிபெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் சேவைக்கு நியமிக்கப்பட்ட வேண்டிய சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில தேர்ச்சி கொண்ட மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களை உருவாக்கும்.
3. சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக தகைமையுடைய ஆசிரியர்களை உருவாக்குதல்.
4. பொது மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க மும் மொழி திறன் கொண்ட அரச உத்தியோகத்தர்களை உருவாக்குதல்.

**நிறுவனத்தின் பணிகள்**

- சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி திறனை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நபர்களுக்கு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியை கற்பிக்கும் திறமையுடைய நபர்களை உருவாக்குவாற்கு சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பற்றிய நீண்ட பயிற்சியை வழங்குதல்.
- நிறுவனத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாக கொண்டு நடாத்துவதற்கு ஆய்வு மற்றும் கற்கைகளின் வெளியீடுகளை பயன்படுத்தும் நோக்கத்துடன் மொழி பயிற்சியை வழங்குவது தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு மற்றும் கற்கைகளை நடாத்தல்.
- பொருத்தமான நபர்களுக்கு மொழி பயிற்சியை வழங்குதல் மற்றும் அந்த பயிற்சியையும் கற்கைகளையும் பூர்த்தி செய்யும் வெற்றிகரமான கற்கையாளர்களுக்கு சனாறிதல் மற்றும் டிப்ளோமா வழங்குதல்.
- மொழிக் கற்றலை மேற்கொள்வதற்கு பயிற்றப்பட்ட நபர்களை உள்ளடக்கிய சபை ஒன்றை தாபித்தல்.
- மொழிகள் தொடர்பான தரவுகளை சேமிக்கும் இடத்தை தாபித்தல்.
- மொழிபெயர்ப்பாளர்கள், உரைபெயர்ப்பாளர்கள், மற்றும் தட்டச்சு செய்பவர்கள் ஆகிய விசேட குழுக்களுக்கு சிங்கள, தமிழ் மற்றுமு் ஆங்கில ஆகிய மொழிகளில் விசேடமான பயிற்சி கற்கை நெறிகளை நடாத்தல்.
- தேவை என கருதும் போது சிங்கள், தமிழ் மற்றுமு் ஆங்கில மொழிகளின் தரத்தை மேம்படுத்த அவற்றில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி பொருத்தமான அதிகார மையங்களுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பற்றிய மொழிசார் ஆய்வுகளை மேற்கொள்ளல், அவற்றுக்கு உதவியளித்தல் மற்றும் மேம்படுத்தல்.

மேற்கூறப்பட்ட நிறுவத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள அனைத்து தீர்மானங்களையும் முகாமைத்துவ சபையினால் எடுக்கப்படுவதுடன் நிறுவனத்தின் கற்கை நடவடிக்கைககளுக்கு கற்கை சபை பல்வேறு வகைகளில் உதவி வழங்குகிறது.

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**தேசிய மொழிக் கல்வி மற்றும் கல்வி நிறுவனத்தின் பொருளாதார முன்னேற்றம்**



| தொ /இல | செயற்பாடு | உத்தேசிக்கப்பட்ட தொகை | உண்மைச் செலவு | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | அரச உத்தியோகத்தர்களுக்கான பகுதி நேர பயிற்சி கற்கைநெறி | 7,912,000.00 | 16,168,950.00 | 204.35% |
| 02 | அரச உத்தியோகத்தர்களுக்கான 12 நாட்கள் தங்குமிட வசதியற்ற மொழி பயிற்சி கற்கைநெறி | 1,400,000.00 | 6,650,464.50 | 47.53% |
| 03 | தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக நடாத்தப்பட்ட 12 நாட்கள் குறுங்கால பயிற்சி கற்கைநெறி | 1,800,000.00 | 2,297,858.00 | 127.65 |
| 04 | அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு கற்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 500,000.00 | 719,981.00 | 143.99% |
| 05 | ஆசிரியர்களுக்கான மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம் | 700,000.00 | 621,663.00 | 88.81% |
| 06 | பொது மக்களுக்கான மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 18,840,000.00 | 12,834,614.00 | 68.12% |
| 07 | பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிங்கள மற்றும் தமிழ் மொழி கற்கைநெறி | 43,500.00 | 11,200.00 | 25.74% |
| 08 | நிறுவனத்தின் பணிக்குழுவுக்கான பயிற்சி மற்றும் கொள்திறன் விருத்தி நிகழச்சித்திட்டம் | 300,000.00 | 111,017.00 | 37% |
| 09 | வைத்தியர்களுக்கான தமிழ் மொழி கற்கைநெறி | 2,500,000.00 | 3,606,579.00 | 144.26% |
| 10 | ஆசிரியர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1,250,000.00 | 1,158,361.00 | 92.66% |
| 11 | அரச மற்றும் அரை-அரசாங்க நிறுவனங்களுக்கு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,500,000.00 | 155,467.00 | 10.36% |
| 12 | விசேட கோரிக்கையின் பேரில் நடாத்தப்படும் கற்கைநெறி | 750,000.00 | 424,702.60 | 56.62% |
| 13 | மொழிச் சங்க ஆய்வு | - | | |
| | மொத்தம் | 44,760,857.00 | 37,495,500.00 | 83.76% |

**1. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் 2014ஆம் ஆண்டினுள் 2014ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு பயிற்சி கற்கைநெறிகள்.**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச உத்தியோகத்தர்களை இரு மொழியிலும் வலுப்படுத்துவதற்கு பகுதி நேர கற்கைநெறியை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சேவை நிலைய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்படுவதுடன் அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள் ஆகிய அரச நிறுவனங்களில் உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு தடை இல்லாத வகையில் வாரத்திற்கு 4 அல்லது 6 மணித்தியாலயங்கள் செயற்படுத்தப்பட்டுகிறது. இந்த சிங்கள, தமிழ் மற்றும் சிங்கள பகுதி நேர மொழிப் பயிற்சி கற்கைநெறிகள் மட்டம் என I,II,III மட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் மட்டம் I 300 மணித்தியாலங்களும் மட்டம் II 216 மணித்தியாலங்களும் மட்டம் III 108 மணித்தியாலங்களும் கொண்டதாகும். அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழித் தேர்ச்சியை வழங்குவதன் மூலம் அரச சேவையை வினைத்திறனை மேம்படுத்தல் அரசகரும மொழிகள் கொள்கையை வினைத்திறனாக மேற்கொள்ளுவதற்கு உதவிகளை வழங்குதலும் இந்த கற்கைநெறியை செயற்படுத்துவதன் நோக்கமாகும்.

அந்தவகையில் 2014ஆம் ஆண்டு மட்டம் Iஇல் 5 வகுப்புகளும், மட்டம் II இல் 25 வகுப்புகளும் மட்டம் IIIஇல் 95 வகுப்புகளும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபா. 7,912,000 ஆகும். அந்த வகையில் 2014ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பகுதிநேர பயிற்சி கற்கைநெறி நெறிகளின் விபரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**2014ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட வகுப்புகள்**

| மட்டம் | சிங்கள மொழி வகுப்புகள் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | 01 | 67 | I | 1 | 35 |
| II | 13 | 451 | II | 82 | 2743 |
| III | 32 | 1430 | III | 236 | 11420 |
| **மொத்தம்** | **46** | **1948** | | **319** | **14198** |

அந்த வகையில் 2014ஆம் ஆண்டில் 365 வகுப்புகளுக்கு, 16146 பங்குபற்றுனர்கள் மொழி பயிற்சியை பெற நிறுவனங்களினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

**2014ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட வகுப்புகள்**

| **மட்டம்** | **சிங்கள மொழி வகுப்புகள் எண்ணிக்கை** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** | **மட்டம்** | **தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| I | - | - | I | - | - |
| II | 02 | 58 | II | 44 | 1065 |
| III | 26 | 1302 | III | 144 | 5580 |
| **மொத்தம்** | | **1360** | | **188** | **6645** |

அந்த வகையில் 2014ஆம் ஆண்டில் 214 வகுப்புகள் ஊடாக 8005 பேருக்கு மொழி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த குழுவிற்கு 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் அனுமதி வழங்கப்பட்ட மொழி வகுப்புகளில் உத்தியோகத்தர்களும் உள்ளடங்குவர் என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

**2014 டிசம்பர் 31ஆம் திகதியில் செயற்படும் வகுப்புகள் (2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவை)**

| மட்டம் | சிங்கள மொழி வகுப்புகள் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | - | - | I | - | - |
| II | - | - | II | 14 | 390 |
| III | - | - | III | 19 | 644 |
| மொத்தம் | **-** | **-** | | **33** | **1034** |

**2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வரும் வகுப்புகள்**

| மட்டம் | சிங்கள மொழி வகுப்புகள் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | - | - | I | - | - |
| II | 22 | 1049 | II | 54 | 1817 |
| III | 16 | 1022 | III | 225 | 10239 |
| **மொத்தம்** | **38** | **2071** | | **279** | **12056** |

**2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வரும் வகுப்புகள்**

| மட்டம் | சிங்கள மொழி வகுப்புகள் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | 01 | 47 | I | 01 | 35 |
| II | 11 | 342 | II | 51 | 2300 |
| III | 24 | 942 | III | 125 | 6923 |
| மொத்தம் | **36** | **1331** | | **177** | **9258** |

அந்த வகையில் 2014 செப்டெம்பர் 31ஆம் திகதி ஆகின்ற போது 563 வகுப்புகளினூடாக 25750 உத்தியோகத்தர்கள் மொழி பயிற்சியை பெற்றுள்ளனர்.

**2014 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதும் முறையாக நிறைவு செய்யப்படாத வகுப்புகள்**

| மட்டம் | சிங்கள மொழி வகுப்புகள் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | - | - | I | - | - |
| II | 06 | 171 | II | 59 | 1665 |
| III | - | - | III | 123 | 4258 |
| மொத்தம் | **06** | **171** | | **182** | **5923** |

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி 2014ஆம் ஆண்டில் 188 வகுப்புகள் செயற்படாது போயுள்ளதுடன் அந்த வகுப்புகளில் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் அனுமதியளிக்கப்பட்ட வகுப்புகளும் உள்ளன என்பது கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.



அரச உத்தியோகத்தர்கள் பகுதி நேர கற்கைநெறிகள் ஊடாக இரண்டாம் மொழி பயிற்சியை வழங்குவதற்கு 2014ஆம் ஆண்டில் நிறுவனங்கள் ஊடாக ரூபா. 16,168,950.00 செலவு செய்யப்பட்டள்ளன.

**1.1.அரச உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதியற்ற 12 நாள் இரண்டாம் மொழி பயிற்சி கற்கைநெறி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் பகுதி நேர கற்கைநெறிகளுக்கு இணைவதற்கு முடியாத அரச உத்தியோகத்தர்களுக்கு 12 நாட்கள் குறுங்கால மொழி பயிற்சி கற்கைநெறிகள் ஒழுங்கமைக்கபட்டுள்ளன. கலாசாரம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்காக மனித நேயம் மற்றும் சகவாழ்வு பண்புடன் கூடிய அரச உத்தியோகத்தர்களை உருவாக்க நிறுவனம் மேற்கொள்ளும் முக்கிய முயற்சியாக இந்த 12 குறுங்கால மொழி பயிற்சியை குறிப்பிடலாம். இந்த கற்கைநெறியை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் 12 நாட்கள் தொடர்ந்து பங்குபற்ற வேண்டியதுடன் கற்கைநெறி நிறைவு செய்த பின்னர் முறையான எழுத்து மற்றும் பேச்சு மதிப்பீடுகளுக்கு அமைய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அந்த வகையில் 2014ஆம் ஆண்டில் 12 நாட்கள் தங்குமிட வசதியற்ற கற்கைநெறிகள் 10 நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட தெகை ரூபா. 1,400,000 ஆகும். 2014ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 12 நாட்கள் தங்குமிட வசதியற்ற கற்கைநெறிகள் பற்றிய விபரம் கீழ் வருமாறு அமைந்துள்ளது.

2014ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்கள் 2563 பேர் 12 நாட்கள் தங்குமிட வசதியற்ற தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 35 ஊடாக பயிற்சி பெற்றுள்ளன. அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா. 6,650,464.50 ஆகும்.

**1.2.தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக மேற்கொள்ளப்பட்ட 12 நாட்கள் குறுங்கால பயிற்சி கற்கைநெறி**



நிறுவனத்தினால் தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 12 நாட்கள் குறுங்கால மொழி கற்கைநெறி இடம்பெற்றன. அந்த வகையில் 214ஆம் ஆண்டினுள் தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் இலக்கு மாவட்டங்களான கேகாலை, குருநாகல், புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்களில் நாட்கள் தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சிகள் 15ஐ மேற்கொளீகு திட்டமிடப்பட்டன. அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா. 1,800,000 ஆகும். ஆரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி தேர்ச்சியை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் அரச மொழி கொள்கை அமுல்படுத்துவதற்கு உதவியளித்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதன் நோக்கமாகும். 2014ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக நடாத்தப்பட்ட 12 நாட்கள் இரண்டாம் மொழி நிகழச்சித்திட்டத்தின் விபரங்கள் கீழ் வருமாறு அமைந்தன.

2014ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக இடம்பெற்ற 12 நாட்கள் குறுங்கால மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அரச உத்தியோகத்தர்கள் 977 பேர் பயிற்சி பெற்றுள்ளன. அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா. 2,297,858.00 ஆகும்.

**1.3.ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

நிறுவனத்தினால் 25 நாட்கள் தங்குமிட நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்கெடுத்து அதில் சித்தியடையும் ஆசிரியர்கள் மட்டுமே நாடாளவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட மொழி பயிற்சி கற்கைநெறியை கற்பிப்பதற்கு தகமை பெறுவர். இதயபூர்வமாக இணைந்த பிரதிபளிப்பு பங்களிப்புடனான கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையை (Participatory Reflective Heart holding Teaching Learning Process) பயன்படுத்தி கற்றல் நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவதுடன் நிறுவனத்தினால் அவர்களுக்கான மாகாண மட்டத்தில் மீளாய்வு மற்றும் மேற்பார்வை பயிற்சி கற்கை நெறிகளையும் செயற்படுத்தப்படுகின்றன. அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்த அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழிளை கற்பிப்பதற்கு சிறந்த திறமையான ஆசிரியர்களை உருவாக்குதலும் மொழிச் சங்க நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பொது சமூகத்துக்க மொழி தேர்ச்சியை வழங்ககூடிய ஆசிரியர் குழுவை தாபிப்பதும் இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதன் நோக்கமாகும்.



### 1.4. 2014ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களுக்கு மற்றும் சாதாரண மக்களுக்கு கற்றலுக்காக நடாத்தப்பட்ட ஆசிரியர் ஆலோசகர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

2014ஆம் ஆண்டில் இவ்வாறான 04 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டதுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 719,981.00 ஆகும்.

| தொடர் இல | இடம் | காலம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | செலவான தொகை |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்தை பயிற்சி நிலையம் | ஆகஸ்ட் 13-14 | 21 | 110,227.00 |
| 02 | அகலவத்தை பயிற்சி நிலையம் | செப்டம்பர் 14-06 | 54 | 165,331.00 |
| 03 | அகலவத்தை பயிற்சி நிலையம் | செப்டம்பர் 07-09 | 36 | 132,961.00 |
| 04 | அகலவத்தை பயிற்சி நிலையம் | ஒக்டோபர் 11-15 | 37 | 132,416.00 |
| 05 | அகலவத்தை பயிற்சி நிலையம் | நவம்பர் 05-09 | 42 | 179,046.00 |
| | **மொத்தம்** | | 190 | **719,981.00** |

மேற்குறித்த அட்டவணையின்படி ஆசிரிய ஆலோசகர்கள் 190 பேர் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பயிற்சி பெற்றுள்ளதுடன் அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா. 719,981.00 ஆகும்.



### 1.5.ஆசிரியர்களுக்கான மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

2014ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான 06 மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா. 700,000 ஆகும்.

| தொடர் இல | இடம் | திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | செலவான தொகை |
|---|---|---|---|---|
| 01 | அரசகரும மொழிகள் திணைக்களம் | பெப்ரவரி 18 | 176 | 100,992.00 |
| 02 | அகலவத்தை பயிற்சி நிலையம் | பெப்ரவரி 27 | 179 | 132,629.00 |
| 03 | அகலவத்தை பயிற்சி நிலையம் | மார்ச் 18-20 | 22 | 63,849.00 |
| 04 | பதுளை மாவட்ட செயலகம் | ஏப்பிரல் 25 | 178 | 119,433.00 |
| 05 | மும் மொழி இலங்கைக்கான ஜனாதிபதி செயலணி அலுவலகம் | மே 06 | 15 | 4,200.00 |
| 06 | அரசகரும மொழிகள் திணைக்களம் | யூன் 04 | 23 | 32,432.00 |
| 07 | அரசகரும மொழிகள் திணைக்களம் | யூன் 18 | 17 | 33,418.00 |
| 08 | கண்டி மாவட்ட செயலகம் | செப்டம்பர் 19 | 153 | 102,265.00 |
| 09 | களுத்தறை மாவட்ட செயலகம் | நவம்பர் 15,16 | 33 | 32,445.00 |
| | **மொத்தம்** | | **796** | **621,663.00** |

மேற்குறித்த அட்டவணையின்படி 2014ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான 09 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 796 பேர் பங்குபற்றியுள்ளன. அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா. 621,663.00 ஆகும்.



### 1.6.பொது மக்களுக்கான மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினூடாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய பொது மக்களுக்கு மொழி பயிற்சி வழங்கல் 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கற்கைநெறி 150 மணித்தியால பேச்சு கற்கைநெறி என்பதுடன் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது. பொது மக்களுக்காக சிங்கள மற்றும் தமிழ் மொழி திறனை வழங்குவதன் மூலம் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதே இந்த கற்கைநெறியின் நோக்கமாகும். 2014ஆம் ஆண்டில் இவ்வாறான வகுப்புகள் 314 ஆரம்பிக்க திட்டமிடப்பட்டதுடன் அதற்கு ரூபா. 18,840,000 ஒதுக்கீடு செய்யப்பட்டத. வருடம் முழுதும் மேற்கொள்ளப்பட்ட மொழிச் சங்க வகுப்புகள் பற்றிய விபரம் கிழே தரப்பட்டுள்ளது.

**2014ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்ட வகுப்புகள்**

| மொழி | வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிங்களம் | 42 | 1260 |
| தமிழ் | 322 | 12660 |
| **மொத்தம்** | **364** | **13920** |

அந்தவகையில் 2014ஆம் ஆண்டில் 364 வகுப்புகள் ஊடாக 13920 பங்குபற்றுனர்களுக்கு மொழி பயிற்சியளிக்க நிறுவனத்தினால் அனுமதி வழங்கப்பட்டது.

**2014ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட வகுப்புகள்**

| மொழி | வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிங்களம் | 23 | 690 |
| தமிழ் | 157 | 4710 |
| **மொத்தம்** | **180** | **5400** |

மேற்குறித்த அட்டவணையின்படி 2014ஆம் ஆண்டில் 180 வகுப்புகள் ஊடாக 5400 பேர் மொழி பயிற்சியை பெற்றுள்ளனர். இதற்கு 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகளும் உள்ளடங்கும் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**2014 டிசம்பர் 31ஆம் திகதியாகின்ற போது நடைபெற்றுவரும் வகுப்புகள்**

| மொழி | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| | வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்கள் | வகுப்பு | பங்குபற்றியவர்கள் | வகுப்பு | பங்குபற்றியவர்கள் |
| சிங்களம் | - | - | 06 | 180 | 09 | 270 |
| தமிழ் | - | - | 126 | 3780 | 131 | 3930 |
| மொத்தம் | - | - | 132 | 3960 | 140 | 4200 |

அந்த வகையில் 2014 முடிவடையும் போது 272 வகுப்புகள் ஊடாக 8160 பேர் நாடளாவிய ரீதியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் முறைப்படி நிறைவு செய்யப்படாத வகுப்புகள்**

| மொழி | வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிங்களம் | 08 | 240 |
| தமிழ் | - | - |
| மொத்தம் | **08** | **240** |

மேற்குறித்த அட்டவணையின்படி 2014ஆம் ஆண்டில் 08 வகுப்புகள் செயலிழந்துள்ளதுடன் இதில் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் அனுமதியளிக்கப்பட்ட வகுப்புகளும் அடங்கும் என்பதை குறிப்பிடத்தக்கது. 2014ஆம் ஆண்டில் மொழிச் சங்க வகுப்புகளுக்காக நிறுவனத்தினால்

செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 12,834,616.00 ஆகும்.

மொழிச் சங்கம் தேசிய இயக்கத்தின் கீழ் பொது மக்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு 55 வகுப்புகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் அதற்கு நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 01 இடம்பெற்றதுடன் அதற்கு 36 ஆசிரியர்கள் பங்குகொண்டனர். அதற்கு ஒதுக்கப்பட்ட செலவு ரூபா. 75,356.00 ஆகும்.

### 1.7.அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த ஏற்புடைய புதிய செயற்பாடுகள்

இந்த செயற்பாடுகளின் படி கண்டி மாவட்டத்தில் புதிய கிராம உத்தியோகத்தர்கள் 339 பேருக்கு 17 நாள் தமிழ் மொழி கற்கைநெறியொன்று 2014.12.06 – 2014.12.22 வரை கண்டி மாவட்ட செயலகத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதி தேர்தல் காரணமாக அதற்கு கிராம உத்தியோகத்தர்கள் அத்தியாவசியமானவர்கள் என்பதன் காரணமாக மீண்டும் அறிவிக்கும் வரையில் நிகழ்ச்சித்திட்டத்தை ஒத்திவைக்க நேரிட்டுள்ளதாக கண்டி மாவட்ட மேலதிக செயலாளருக்கு 2014.11.25ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.8.பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிங்கள மற்றும் தமிழ் மொழி கற்கைநெறி

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் மக்கள் பிரதிநிதிகளுக்கு மொழிப் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மொழியை கற்பதன் மூலம் மக்களிடத்தில் உள்ள உறவை மேலும் வலுப்பெற செய்தல் மற்றும் அவர்களுக்கு மிகவும் வினைத்திறனாக சேவைகளை வழங்குதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதன் நோக்கமாகும். அந்த வகையில் இலங்கை பாராளுமன்றித்தின் கௌரவ உறுப்பினர்களுக்கு 108 மணித்தியால பேச்சு சிங்கள மற்றும் தமிழ் கற்கைநெறிகள் இரண்டு இந்த வருடத்தில் செயற்படுத்தப்பட்டன. கற்கைநெறிகள் இரண்டும் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் நாட்களில் இடம்பெற்றதுடன் சிங்கள கற்கைநெறிக்கு 06 உறுப்பினர்களும் தமிழ் கற்கைநெறிக்க 16 உறுப்பினர்களும் பங்குகொண்டனர். அதற்காக ரூபா. 87,000 ஒதுக்கப்பட்டதுடன் இந்த வருடத்தில் ரூபா. 11,200 ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.9.நிறுவனத்தின் பணிக்குழுவுக்கு பயிற்சி மற்றும் கொள்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பணிக்குழுவின் கொள்திறனை மேம்டுத்த நிறுவனத்தினால் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் வேறு நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டதுடன் நிறுவனத்தின் முழு பணிக்குழுவிற்கும் ஒரே நேரத்தில் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டதினூடாக பணிக்குழுவிற்கு தொழிசார் வழிகாட்டலுடன் ஆளுமை விருத்திக்கு தேவையான அம்சங்களும் வழங்கப்பட்டன. இதற்காக 2014ஆம் ஆண்டில் ரூபா. 300,000 ஒதுக்கபட்டதுடன் ரூபா 111,017.00 செலவிடப்பட்டது.

## 2.வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

நிறுவனத்தினால் சில கற்கைநெறிகளுக்கு கற்கைநெறியை மேற்கொள்பவர்களிடம் இருந்து கட்டணம் அறிவிடப்பட்டு நடாத்தப்படுகிறது. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பெரும்பாலானவைகள் அகலவத்தை பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்படுவதுடன் கற்கைநெறி மேற்கொள்பவர்களின் உணவு மற்றும் தங்குமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கப்படும். வளவாளர்கள் மற்றும் எனைய செலவுகள் நிறுவனத்தினால் கையேற்கப்படும்.

### 2.1.வைத்தியர்களுக்கான தமிழ் மொழி கற்கைநெறி

பகுதிநேர பயிற்சி பெறுகின்ற வைத்தியர்களுக்கான சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க நிறுவனத்தினால் 11 நாட்கள் இரண்டாம் மொழி பயிற்சி கற்கைநெறியை நாடத்துகிறது. இந்த கற்கைநெறிக்காக செலவாகும் அனைத்து செலவுகளும் சுகாதார அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் மக்களுக்கு மிகவும் இன்முக மற்றும் வினைத்திறனான சேவை வழங்குதல் இந்த கற்கைநெறியின் நோக்கமாகும். 2014ஆம் ஆண்டில் இவ்வாறான 10 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

| தொடர் இல | இடம் | திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | செலவான தொகை |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்தை பயிற்சி நிலையம் | பெப்ரவரி 10-20 | 70 | 484,316.00 |
| 02 | அகலவத்தை பயிற்சி நிலையம் | மார்ச் 31- ஏப்பிரல் 10 | 87 | 654,343.00 |
